விளம்பர விகிதங்களுக்கு:
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
•
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் ,, 6-50

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு ஆனி மாதம் 2-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 21-ம் இலக்கம்

# 400 வருடங்களுக்குமுந்திய தீர்க்கதரிசனம்

## அர்ச். சூசையப்பர் ஸ்துதிக்கப்படுவாராக!

[தொடர்ச்சி]

நிற்க, 1917-ம்ஆண்டிலே மனதில் இன்னுமதிகம் பதியக்கூடிய ஆச்சரியமான சம்பவங்கள் இணையொத்துநிகழலாயின. போர்த்துக்காலிலே பாத்திமாபதியில் தேவதாயார் மூன்றுபிள்ளைகளுக்குத் தொடர்ச்சியாக அநேககாட்சிகள் அருளலாயினர். இந்தக் காட்சிகளிலெல்லாம் மகாவிசித்திரமான அற்புதகாட்சி அவ்வருடம் ஐப்பசிமாதத்தில் நிகழலாயிற்று. அப்போதுதேவதாயார் பாத்திமாபதியில் தம்முடன்காட்சியளிப்பதற்குச் சித்தங்கொண்ட மற்றும் ஒரேயொருஅர்ச்சியசிட்டவராக அர்ச். சூசையப்பரைப் பிள்ளைகள்மூவருக்கும் காண்பிக்கலாயினர்.

இந்தக்காட்சியிலே அர்ச். சூசையப்பர் திருக்குழந்தையேசுவைத் தமதுகரத்தில் ஏந்தியிருப்பதையும், வினோதப் பிரியத்தினாலோ, அச்சபயத்தினாலோ, அன்றேல் விசுவாசத்தினாலோ அங்குவந்து பெருந்திரளாகக் குழுமியிருந்த மாபெரும் சனக்கூட்டத்தை ஆசீர்வதிப்பதையும் பிள்ளைகள்மூவரும் கண்டார்கள்.

இன்னும்அன்றுதினமே சூரியன் தன்னைத்தானே சுற்றிச்சுழன்று நாலாபக்கங்களிலும் பலவர்ணப் பிரபைக்கதிர்களை வீசிக்கொண்டு நடனமாடியஅற்புதமும் எல்லவருமே அதிசயித்துப் பரவசங்கொள்ளும்படியாக நடைபெற்றது. இந்தச்சூரியநடனத்திற்கான இயற்கைக்காரணங்களை எந்தவிஞ்ஞானியுமே இன்றுவரை விளக்கமுடியாதிருக்கின்றான். அப்போது ருஷியா மனந்திருப்பப்படுமென்றும் தேவதாயார் வசனித்தார். 1917-ம்ஆண்டிலே அப்பிள்ளைகள் அவர்கூறியதின் தாற்பரியத்தை ஊகித்தறிய இயலாதிருந்தார்கள். ஆனால், இன்றுநாம் அதைநன்றாக அறிகின்றோம்.

அங்ஙனமாக, 1917-ம்ஆண்டின் ஐப்பசியாகிய அதேமாதத்தில் கம்யூனிஸ்தபுரட்சி ருஷியாவில் வெற்றிகாணலாயிற்று. அதன்மேல் யுத்தத்தாலே கெட்டு நொந்துபோயிருந்த மக்கள்மீது சிக்கெனப்பற்றிய தனதுஇரும்புப்பிடியை அழுங்குப்பிடியாக அது பலப்படுத்திக்கொண்டது.

ஒன்றோடொன்று இணையொத்து நிகழும்சம்பவங்கள் பின்னரும் ஒருசிலவருடங்களின்பின் தொடர்ந்துநடைபெற்றன. 1919-ம்ஆண்டிலே லெனின் என்பான் மூன்றாவதுசர்வதேசஸ்தாபனத்தை — அதாவது 'கமின்ரேண்'என அதிகம்நன்றாக அறியப்படுகின்ற தில்விளைக்கும் ஸ்தாபனத்தை—அடியிட்டான். இந்தஸ்தாபனத்துக்கு அதிகம் நல்ல வியாக்கியானத்தைத் திரு. ஜே. எட்கார் ஹூவர்அவர்கள் கொடுத்திருக்கின்றார். "பொல்ஷெவிக்க சர்வாதிகார ஆளுமுறை மூலம் உலகத்தைச்சூழவரவுள்ள கம்யூனிஸ்தர்களின் நடபடிகளுக்கு வழிகாட்டக்கூடிய சோவியற்கொள்கையின் ஆப்புக்கல்"லே அது ஸ்தாபித்திருக்கிறதென்று அவர் கூறுகின்றார். "கமின்ரேண்" என்பது சகல நாடுகளிலும் தொழிலாளர் வகுப்புகளின் ஒன்றுபட்ட அரசியல் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தற்கெனவுள்ள தொழிலாளர்களின் குழுக்களென அர்த்தங்கொள்ளும்.

நாங்கள் பலவந்தத்தின் பக்கமாகத் திரும்பவேண்டுமென்று கம்யூனிஸ்தர்கள் ஆசிக்கின்றனர். ஆனால், அர்ச். சூசையப்பர்பக்கமாக நாங்கள்திரும்பவேண்டுமென்று திருச்சபை ஆசிக்கின்றது. ஒருவருடத்தின்பின் அதாவது 1920-ம்ஆண்டு 15-ம் ஆசீர்வாதப்பப்பாப்பானவர் "மோத்துபுறொப்பிறியோ"என்ற தமதுபெயர்பெற்ற சாதாரண நிருபத்தை விடுத்தார். அதிலே சமூகதீமைகளுக்கு மாற்றுமருந்தாக அர்ச். சூசையப்பர்பக்தியை அவர் சிபாரிசுபண்ணியிருந்தார். வறியவர்கள் அர்ச். சூசையப்பரின் பக்கமாகத் திரும்பவேண்டுமென்றும், கம்யூனிஸ்தகிளர்ச்சிக்காரரின் வாக்குகளில் நம்பிக்கை வைக்க வேண்டாமென்றும் அவர்வற்புறுத்தியபின் அர்ச். சூசையப்பர் பாதுகாவலராயிருந்துவருகின்ற குடும்பத்தின் விசேடத்தை அழுத்தமாக எடுத்துக்காட்டினார்.

அவர்தெரிவித்ததாவது: "தங்களது கைவேலையாலே ஓசீவனத்தைத் தேடுகின்ற நம்முடைய பிள்ளைகளையெல்லாம் கடமையின் பாதையிலே காத்துவைப்பதற்கும், மற்றொன்றுமே இணையில்லாதவிதமாய்க் கிறீஸ்துவபோதனைக்கு அதிகம் விரோதமான சோஷலிஸத்தின் தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டுப் பழுதடையாது அவர்களைப் பாதுகாப்பதற்குமாக முழு ஆவலுடன் அர்ச். சூசையப்பரை அவர்கள் முன்பாக விசேஷவிதமாய் ஏற்படுத்திவைக்கின்றோம். வாழ்க்கையிலே அவர்கள் தங்களது விசேஷவழிகாட்டியாக அவரைக்கண்டுபாவித்துத் தங்கள்பாதுகாவலராக அவரை வணங்கிப் பக்திசெய்துவரவேண்டும்" என்பதே.

[வளரும்]

# சீனதேச வேதகலாபனை

வண. அந்திரே ஜானிசுவாமியார் சமீபத்தில் தாம்எழுதிவெளியிட்டுள்ள "சீனாவின் சித்திரவதைகள்" என்னும்புத்தகத்திலே அந்தநிர்ப்பாக்கியநாடு சம்பந்தமாய்ச் சிலவிபரங்கள் தந்திருக்கின்றார். அவைகள் உலக பத்திரிகைகளில் பிரசுரமாகும் பொய்வரலாறுகளுக்கும், கத்தோலிக்கர்அல்லாத கிறீஸ்தவர்கள் அநேகரிடையே இருந்துவரும் தப்பானஎண்ணங்களுக்கும் முற்றுப்புள்ளிவைக்கக் கூடியனவாகும். அப்புத்தகத்தில் வெளிவந்துள்ள சிலவிபரங்கள் வருமாறு:

வண. ஜானிசுவாமியார் தெரிவித்திருக்கிறபடி, கம்யூனிஸ்தர்கள் சீனாவைஅடிப்படுத்தமுன் அத்தேசத்தில் பல்வேறு இருபது நாடுகளிலிருந்துபோன சீனர்கள் அல்லாத 3,015குருமாரும், 475 பிறதர்மாரும், 2,351கன்னியாஸ்திரிமாரும் இருந்தார்கள். 1958-ம் ஆண்டிலே இவர்களில் கண்டிப்பான கட்டுக்காவலின் கீழ் ஒரு மேற்றிராணியாரும், சிறையிலே இருகுருமாரும், வீட்டுக்காவலிலே மற்றிருகுருமாரும், பதினொருகன்னியாஸ்திரிமாருமே சீனாவில் இருந்துவரலானார்கள். 2,676சீனக்குருமாரில் 200 பேருக்கு மேற்பட்டோர் சிறைவைக்கப்பட்டும், கொல்லப்பட்டும், 500பேர் நாடுகடத்தப்பட்டும், மற்றும்500பேர் கட்டுக்காவலின்கீழ் வைக்கப்பட்டுமிருக்கிறார்கள். 5,112சீனக்கன்னியாஸ்திரிமாரில் 4,000பேருக்கு மேல் சிறைவைக்கப் பட்டிருக்கிறார்கள். எவருமே பூரணசுதந்திரத்தைச் சுகிப்பதில்லை.

நாட்டுப்புறங்களிலுள்ள கத்தோலிக்ககோவில்களும், மற்றும்ஸ்தாபனங்களும் பறிமுதலாக்கப்பெற்றுத் தானியபண்டகசாலைகளாகவும், குண்டு மருந்து முதலாம் யுத்த உபகரணங்கள் சேமித்துவைக்கும் சாலைகளாகவும், படைப்பயிற்சிஅளிக்கும் பாடசாலைகளாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. பெரியநகரங்களில் ஒருசிலகோவில்கள் மாத்திரம் தரிசகர்களுக்கும், மற்றும் பிறநாடுகளிலிருந்துபோகும் "பிரதிநிதிக"ளுக்கும்போலித்தனமாகக் காட்டிக்கழிக்கும் "கண்" காட்சித் தலங்களாக விடப்பட்டிருக்கின்றன.

ஒருபிரான்ஸியகுரவரான வண. அந்திரே ஜானிசுவாமியார் 1949-ம்ஆண்டுக்குமுன் அநேக வருடகாலம் சீனாவில்இருந்தவர். அக்காலத்திலே கத்தோலிக்கர் ஸ்தாபித்துநடத்திவந்த சமூகசேவைப் பெருந்தொண்டுகளைச் சுவாமியார் அட்டவணைப்படுத்தியிருக்கின்றார். அப்போது 216 கத்தோலிக்க ஆஸ்பத்திரிகளும், 950ஆரோக்கிய பரிபாலனசாலைகளும், 420அநாதசாலைகளும், 12குஷ்டரோகர்சாலைகளும், 4,000ஆரம்பபாடசாலைகளும், 225மத்தியபாடசாலைகளும், மூன்றுசர்வகலாசாலைகளும் இருந்தன. கம்யூனிஸ்தர்களாலே இவைகளெல்லாம் கைப்பற்றப்பட்டுள்ளன. அதனால் 350வருடங்களின்முன் திருச்சபை தொடக்கிநடத்திய தொண்டுகளெல்லாம் அழித்துவிடப்பட்டுள்ளன.

கம்யூனிஸ்தர்களது வழிகாட்டுகையின்கீழ் இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இடங்களின் வெளித்தோற்றத்தைமாத்திரம் கண்டு திரும்பியவர்களும், கம்யூனிஸ்த மொழிபெயர்ப்பாளர்மூலம் மக்களுடன் பேசியவர்களுமான பிறநாடுகளைச் சேர்ந்த தரிசகர்களின் அறிக்கைகளிலிருந்து முன்சொன்னவிபரங்களை வண. ஜானிசுவாமியார் எடுத்துக்கொண்டவர் அல்ல. ஆனால், சீனமக்களது வாழ்க்கையுடன் இணைந்து வசித்திருந்த சுமார்300கத்தோலிக்க மிஷனரிமார் கொடுத்தவாக்குறுதிகளை ஆதாரமாகக்கொண்டே வெளியிட்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகி அமுதா

— A. யோசேப் பெர்னண்டோ —

அழகான, சித்திர வேலைப்பாடுகள் அமைந்த, பளபளப்பான நிலைக் கண்ணுடி. அதன்கீழ் நீளமான ஒருமேசை. அதிலே அப்பப்பா! எத்தனை பொருட்கள். வாசனைத்தூள் அடங்கிய டப்பா. மணம்கமழும் திரவப்புட்டிகள். திலகத்தட்டுக்கள். கதம்பமாலைக்கொத்து. வண்ணச்சரிகைப் பாவாடை. விதவிதமான தலை அணிகள். இன்னும் பல பொருட்கள் அந்தமேசையில் குவிந்து கிடந்தன. அதன் எதிரே பன்னிரண்டு வயது நிரம்பாத தங்கச் சிலை; இல்லை, இல்லை; அழகெலாம் ஒருங்கே வார்த்து அமைத்த பேசும் சித்திரம்! அவள்பெயர் அமுதா. நிலைக்கண்ணுடியில் அவளது பிம்பம் தெரிந்தது. அவள் தனது அதரத்தை விரித்தும் குவித்தும், கன்னத்தைச் சுழித்தும், தன் முல்லைப் பற்களைக் காட்டிச் சிரித்தும் தனதுஅழகை ரசித்தாள், ரசித்துக் கொண்டே இருந்தாள்.

பதினறுவயது நிரம்பியது. அவளுடைய அழகு செடியில்ஆடும் அன்றலர்ந்த ரோஸாமலரைப்போல் பொலிவுடன் காணப்பட்டது. தன் அழகைக் கண்டு அவளே பெருமிதம் கொண்டாள். “எனது வகுப்பில் நான்தான் சிறந்த அழகி; சிச்சீ, வகுப்பிலா? இல்லை, இல்லை; இந்த உலகிலேயே நான்தான் சிறந்த அழகி! உலகப் பேரழகி ‘கிளியோப்பாட்ரு’ என்று கூறுகிறுர்களே; ஆனுல், அவள் என்னைக் கண்டால், துள்ளும் கயல்விழிகளை — கடைந்தெடுத்த அங்கஅமைப்புகளை — பாண்டிநாட்டு முத்துக்கள் அடுக்கிவைத்தாற்போன்ற பற்களை — ரோஸா இதழினும் மென்மையான என் அதரத்தை — மாதுளங்கனி போன்ற என் கன்னத்தை — சுருள்சுருளாகத்தொங்கும் என்சிகையின் அலங்காரத்தைக் கண்டிருந்தால் தானும் ஒருஅழகியென்று மேடையிலேறி நின்றிருக்கமாட்டாள், ஓடிஒளிந்திருப்பாள். “மெர்க்குரி விளக்குக்குமுன் — மெழுகுவர்த்தி” என்று எண்ணி எண்ணிப் பெருமிதம்கொள்ளுவாள். பிறபெண்கள் தன்மேனியில் தொடச் சம்மதிக்கமாட்டாள். ஏழைப்பிள்ளைகளை — கிழிந்தஆடையுடன் தலையில் எண்ணெயின்றிவரும் பிள்ளைகளைக் கண்டால் அவர்களைமிருகத்தினும்மிகக் கேவலமாகத்தான் நினைப்பாள். காட்டுமிராண்டிகள், கழுதைகள் என்று அவள்வாய் அவர்களைத்திட்டும்.

படிப்பைமறந்தாள். இவளை நாடிப் பலஆடவர்கள் வருவார்கள். அவர்கள் இவளைக்கண்டதும் மழையைக் காணும் வாடியபயிர்போல்—முகிலைக் கண்டு அகவும்மயிலைப்போல — திசைதெரியாத நடுக்கடலிலே கரைதெரிந்திட்ட மாலுமிபோல் மகிழ்வார்கள். குதிப்பார்கள், குதூகலம்கொள்ளுவார்கள். அவர்களிலே நகைக்கடை நல்லமுத்து, ஜவுளிக்கடை ஜீவானந்தம், சைக்கிள்கம்பெனிச் சங்கர் இவர்களை எப்பொழுதும் அங்குகாணலாம். இவர்களது குடும்பத்தைவாழ்வித்த செல்வமெலாம் அமுதாவின் இரும்புப் பெட்டியில் அடங்கிக்கிடந்தன.

காலம்சுழன்றது. அமுதா 25 வயதை எட்டிப்பிடித்துவிட்டாள். ஒருநாள் நல்லசுகமின்றிப் படுத்துவிட்டாள். அப்பப்பா! அவளது ஆணை கேட்க எத்தனையோபேர் வந்தனர். ஆனுல், அவளுக்கு வைசூரிகண்டுள்ளது என்று கேள்விப்பட்டதுமுதல் சிலர் அப்பக்கம் வருவதே இல்லை. வைசூரி புண்ணுகமாறியதும், அவள் முகத்தைப்பார்க்கச் சகிக்கவில்லை சிச்சீ, என்ன அலங்கோலம்! “இதுவா அமுதா!” என அருவருக்கும்படி இருந்தாள் அவள். அவள் வீட்டில் எவருமே தங்கவில்லை. அவளைத் தவிக்கவிட்டுப் பறந்துவிட்டார்கள் எல்லோரும். தனிமையாளுள் அமுதா. அவள் தன் கடைக்கண்ணை அசைத்தால் கணக்கற்றவர்கள் குழுமிவிடுவார்களே. ஐயோ! இப்பொழுது அவள் துயரை ஆற்ற, அவள்மனதைத் தேற்ற ஒருவருமே இல்லை. அவள் தனது புண்களை ஆற்றத் தன் இரும்புப்பெட்டியில் தூங்கிக்கொண்டிருந்த பணத்தை எல்லாம் செலவுசெய்தாள். எப்படியோ புண்கள் ஆறின. ஆனுல், அவள் வாய் கோணிக்கொண்டது. இடது கால் முடங்கிக்கொண்டது. இடது கண் மூடிவிட்டது. அவள் உடலெங்கும் அலங்கோலமான கறுப்புப்புள்ளிகள் வறுமையால்வாடினுள் அமுதா. வீட்டுவாடகை கொடுக்கமுடியாததால் வீட்டைவிட்டு வெளியேறினுள். தன்னை நாடிவந்தவர்களிடம் சென்ருள் உதவிகேட்க. “சீ! நாயே போவெளியே” என்று விரட்டினுர்கள்.

அழகிஅமுதா எங்கே! அலங்கோல பிச்சைக்காரி எங்கே! அழகுஓடத்திலே ஓட்டைவிழுந்தால் — நிரம்பியபாற்குடத்திலே ஒருதுளி விஷம்கலந்தால் எவரும் ஒதுக்கிவிடமாட்டார்களா? “சீ, மதிகெட்டவளே போவெளியே; அன்று நீ அழகி, இன்று அலங்கோல பிண்டம். கணவலைவீசி, கனிமொழி பேசி எத்தனையோ குடும்பங்களின் நல்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

ஸ்ரீமான்
பிறெட்றிக் நீக்கிலாப்பிள்ளை
(தம்பிராசா) அவர்களின்

## மரண அறிக்கை



பாண்டியந் தாழ்வு வாசராகிய இவர் 9-5-60-இல் இவ்வுலகவாழ்வை நீத்தனர். இவரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக மன்றுடும்படி யாவரையும் தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

நித்திய இளைப்பாற்றியை இவருக்குத் தந்தருளும் சுவாமி. சதாகாலபிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக ஆமென்.

பிரிய தந்தையைஇழந்து துயருறும்

மக்கள்: திருமதி பி. இ. அன்னம்மா,
திருமதி அ. சிசீலியா,
திருமதி கி. மேரிப்பிள்ளை.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2747

மண்டைதீவு
விசித்தம்பி ஜயாத்துரை
— வழக்காளி.

எதிராக, மண்டைதீவு
1. காண்டவனம் கைலாயபிள்ளை
2. இராசம்மா மகள் சின்னன்
இளையதம்பி — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 2747-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும ஒருதுண்டுக்காணி 1960-ம்ஸு ஆவணிமீ 1-ந்வ திங்கட்கிழமை பிற்பகல் 2மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 600. இன்னும் ரூபா 350-க்கு 9-3-59 தொடக்கம், 9-9-59 வரையும் 12%வட்டியும், தீர்வைத் திகதி தொடக்கம் இறுக்கும்வரை முழுத் தொகைக்கும் 5%வட்டியும், கோட்டுச் செலவு 164ரூபா 52சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, அல்லைப்பிட்டிகோவில்பற்று மண்டைதீவு இறை, “புதுவெளி” எனும்காணி நில. பரப்பு 20. எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — முத்துலிங்கம் சச்சிதானந்தத்துக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். மேற்கு — குருநாதர் சரவணமுத்துவின் ஆதனம். தெற்கு — பள்ளிவாசலுக்கும், கார்த்திகேசு கிருஷ்ணபிள்ளைக்கும் உரிய ஆதனம். இது அடங்கலும் சொரியலாய் கால் (1/4)பங்கு.

ஆர். கனகரத்தினம்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.


## மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

### மேதினம்:

வைகாசித்திங்கள் 1-ம்நாள். அன்று அகிலஉலகமுமே கொண்டாடும் தொழிலாளர்தினம். அதனுல் தொழிலாளரின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரின் திருநாளைத் தாண்டவன்வெளிப் பங்குக்கிறீஸ்தவர்கள் சிறப்பாகக் கொண்டாடினுர்கள். அன்றுகாலை 5மணிக்கு எமதுகட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளால் 1-ம் பூசை நிறைவேறியது. 2-ம்பூசையைத் தொழிலாளருக்காகப் பாத்திமாகிரியில் விக்கார்ஜெனறல் வண. ஜெரோம் டீசா சுவாமிகள் நிறைவேற்றினுர். பூசையின்போது புளியந்தீவுப் பங்குக்குரவர் வண. ஹென்றி பொன்னையா சுவாமிகளால் தொழிலாளருக்கு மாதிரிகையான அர்ச். சூசையப்பரின் சீவியவரலாற்றையும், அவர் மேற்கொண்ட தொழிலையும்பற்றி ஒருபிரசங்கம் செய்யப்பட்டது. பூசையின்போது அடுத்த பங்குகளிலிருந்தும் ஏராளமானதொழிலாளரும், முதலாளிகளும் சமூகமளித்திருந்தனர். பூசைமுடிவில் தொழிலாளர்களையும், அவர்களின் கரங்கள், ஆயுதங்களையும் ஆசீர்வதிக்கும்சடங்கு நடைபெற்றது. தொடர்ந்து 7-30 மணிக்குப் பங்குத்தேவாலயத்தில் 3-ம் பூசை நிறைவேறியது.

அன்றுபிற்பகல்3மணிக்கு ஆலயமணிகள் ஆரவாரஞ்செய்து அனைவரையும்அழைத்தன. தொழிலாளர், முதலாளராகிய விசுவாசிகள் இருபாலாரும் ஆலயத்தில் ஒன்றுகூடி ஊர்வலமாகத் திரிகோணமலை வீதிவழியே சென்று புளியடிக்குடாப் பங்கினரைச் சின்னஆஸ்பத்திரிச் சந்தியில் சந்திக்கவே, அதன்மேல் இருபங்கினரும் கோட்டமுனைப் பாலத்தில் புளியந்தீவுப் பங்கினரோடுசேர்ந்து மட்டுநகர்ப் பெருந்தெரு ஊடேசென்று முற்றவெளி மைதானத்தை அடைந்தார்கள். ஆங்கு இளம்கிறீஸ்தவ தொழிலாளரின் ஆதரவில் மாபெருங்கூட்டம்ஒன்று நடைபெற்றது. அதற்கு வித்துவான் எஸ். ஈ. கமலநாதன் அவர்கள் தலைமை தாங்கினர். தொழில்உதவிக்கம்மிஷனர் திரு. டி. வாலசிங்கம் அவர்கள் எழுந்து, இவ்வருடம் மட்டக்களப்பில் நடக்கும் மேதினவைபவம் ஏனைய இடங்களில் நடைபெறுவதைவிட வித்தியாசமானது; ஏனெனில், தொழிலாளருடன் முதலாளிகளும் உடனின்று தொழிற்படுவதால் இவர்கள் ஐக்கியம் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதில்தெரிவதைப்பற்றித் தமது பேச்சில் குறிப்பிட்டார். அதன்மேல் திரு. ஈ. பாவிலுப்பிள்ளை, திரு. எஸ். வாலசிங்கம் என்பவர்களும், லேபர் இன்ஸ்பெக்றர் திரு. எஸ். பொன்னுத்துரை அவர்களும், வேறுசிலரும் சொற்பொழிவாற்றியதன்மேல் கூட்டம் கலைந்தது.

### பாத்திமாமாதா இல்லத்தரிசனையின் ஞாபகார்த்தநாள்:

ஓராண்டு ஒளித்தோடியது. வந்தது வணக்கமாதம. மரியாயின்மாத முதல் தினம். யாத்திரைக்கன்னிகையான பாத்திமாமாதா நமதுபங்கில் இல்லத்தரிசனைசெய்யப் புறப்பட்ட ஞாபகார்த்தநாள் வந்தது. அன்றுமாலை 7-30 மணிக்குப் பங்கினர் திரளாகக் கூடியிருக்கக் கட்டளைக்குரவரால் தோத்திரபாடற்பூசை நிறைவேற்றிச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது. தொடர்ந்து இரவுமுழுவதும் செபமாலை சொல்லி ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாத்திரைக்கன்னிகையின் திருச்சுரூபம் மின்தீபங்கள், மலர்களிடையே வீற்றிருந்து கடந்தயாத்திரையில் எமதுபங்கிலுள்ளகுடும்பங்கள் அளித்த வாக்குறுதிகளையும், ஒப்புக்கொடுக்கப்பெற்ற செபமாலைகளையும், நற்சீவியத்தையும் நன்மரணத்தையும் நம்மவர்க்கு நினைவூட்டிக்கொண்டிருந்தது. மறுநாள் திங்களன்றுகாலை 6மணிக்குத் தோத்திரபாடற்பூசை நிறைவேறித் “தெதேயும்” என்றதோத்திரகீதத்துடன் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டது. இந்த நன்னளைத் தொடர்ந்து எமதுபங்கின் ஒவ்வோர்இல்லத்திலும் மாதா ஒருதினம் செலவிட்ட ஞாபகம் வருவதால் இந்தஇல்லங்கள் அத்தினத்தை நல்லமுறையாகக் கொண்டாடுமென அறிகின்றேம்.

— பங்குக் கிறீஸ்தவன்


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2727

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

உரும்பிராய்
வைத்திலிங்கம் கந்தையா
— வழக்காளி.

எதிராக, இருபாலை
கந்தையா காதிலிங்கம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2727-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1960-ம்ஆண்டு ஆடிமாதம் 5-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 10,170-உம், இன்னும் ரூபா 7,500-க்கு 72-2-59 தொடக்கம், 3-9-59 வரையும் 100-க்குப் 10%வட்டியும், பின் கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 314 ரூபா 91சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று, இருபாலைஇறை “சீத்தைக் கட்டியும், பொன்னம்பலவளவும்” ப. நி. இ. 8 1/4-உம், கல்வீடுகளும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். இந்தப்பரப்பு எட்டேகாலுக்கும் எல்லை: கிழக்கு — பொன்னையா சரவணமுத்துவிற்கும், பங்காளருக்கும், சின்னத்தம்பி பெண் பறுபதத்திற்கும் உரியஆதனங்கள். வடக்கு — ஒழுங்கை. மேற்கும், தெற்கும் — கை ஒழுங்கை. இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனர்.

நம் 35, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 30-5-60.


● **தன்னையே அதிகாரியாய்த் தெரிந்துகொள்பவன், தன்னை ஓர் பைத்தியகாரனின் கண்காணிப்பில் வைக்கிறுன்.**

— அர்ச். பேர்னுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாப்பரசரின் ஞாபக மாளிகை

பிரபுக்கள்குலச் சீமாட்டிகள் இருவர் அருளப்ப பாப்பரசரின் பிறந்தவிடமாகிய சொத்தோ இல் மொங்தே எனுமிடத்தில் அவரதுமுன்னுள் கோடைகால வாசஸ்தலமாளிகையைஅவருக்கு ஒருஞாபகசின்னமாக வழங்கியிருக்கின்றனர். பாப்புரசர் வெனிஸ்நகரின் பத்திறியாக்கு வாய்க் கருதினல் ரொங்கல்லிஎன அறியப் பெற்றிருந்தபோது தம்முடைய கோடைகாலங்களைச் செலவிட்ட "காமல்தினே" மாளிகையின் சொந்தக்காரர் மரியா ஸ்கொத்தி, மதலேனு கவாங்தி ஸ்கொத்தி என்பவர்களே 'பறேனெஸ்'என அழைக்கப்படும் அவ்விருசீமாட்டிகளுமாவர்.

---

### வத்திக்கான் இராச்சிய மந்திரியார்

பரிசுத்தஸ்தானத்தின் இராச்சியமந்திரியாரும், வைத்தியர்களது ஆலோசனையின் பேரிலே சென்றதைமாதமுதல் பூரண ஆற்றி எடுத்துவந்தவருமான கருதினல் தொமினிக்கோ தார்டினி ஆண்டவர் தம்முடைய முழுப் பணியையும் தற்போது பொறுப்பேற்று நடத்திவருகின்றார். இவர் வத்திக்கான் இராச்சிய மந்திரியாராய் மாத்திரமல்ல, வரப்போகும் இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்க முன்னயத்தகம்மிற்றியின் தலைவராயும், அர்ச். பேதுருவானவர்மகாதேவாலயத்தின் அத்தியட்சகுரவராயும் இருந்துவருகிறார். உலகின் மகாப்பெரிய இந்தஆலயத்தைப் பழுதுபார்க்கும்பொறுப்பு இவருடையதாகும். அன்று இவர் பேசியவிடத்து, தம்முடையசுகத்தாழ்வு காரணமாக வத்திக்கான் இராச்சியமந்திரிபதவியை இராசிநாமாச்செய்வது தமக்குள்ள முழுவிருப்பமென்றும், ஆனல், கடைசித்தீர்மானம் அருளப்பபாப்பரசரைப் பொறுத்ததென்றும் அறிவித்திருக்கின்றார்.

---

### அங்கிளிக்கன்சபைப் பாதிரியார் மனந்திரும்புகின்றார்

பிரஸ்தாபம்பெற்ற அங்கிளிக்கன் சபைப்பாதிரியார்ஒருவர் ஒருகத்தோலிக்கர் ஆகுவதற்காகத் தமது அங்கிளிக்கன் குருபதவியையும், தென்னபிரிக்கப் பாதுகாப்புப்படையிலே தாம்வகித்திருந்த அங்கிளிக்கன் பிரதமவிசாரணைக் குருபதவியையும் இராசிநாமாச் செய்திருக்கின்றார். 1952-ம் ஆண்டுமுதல்1958-ம்ஆண்டுவரை ஜொகானெஸ்பேர்க் நகரிலே அங்கிளிக்கன் சபைப்பாதிரியாராயிருந்த கனம். ரேய் ரூன்டல்வ் அவர்கள் தற்போது ஒருகத்தோலிக்ககுருவாய்வருவதற்குப் படிக்கத் திட்டமிட்டிருக்கின்றார். ஆனல், எங்குபோய்ப் படிக்கிறதுஎன்பதைத் தீர்மானிக்கிறவரை அவர் பிறிற்ரோறியா நகரிலுள்ள அர்ச். வியான்னி அருளப்பர் குருமடத்தில் தங்கியிருக்கின்றார்.

## அர்ச்சியசிட்டபட்ட திருவைபவம்

இருநூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தின்பின் முதன் முறையாக அர்ச்சியசிட்டபட்டஞ் சூட்டும் திருவைபவம்ஒன்று அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திற்குவெளியே நடந்தேறவிருக்கின்றது. வத்திக்கான் அதிகாரபூர்வமாக அறிவியாத போதிலும் திவ்வியகர்த்தர் பரலோகத்திற்கு ஆரோகணமான திருநாளாகும் வைகாசிமாதம் 26-ந்திகதியாகிய இன்றுதினம் பாப்பரசர் முத். கிறெகறி பார்பறிக்கோவுக்கு அர்ச். லத்தறன் அருளப்பரின் அத்தியட்சமகாதேவாலயத்தில் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டியருளுவாரென நம் பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. மத்தியகாலத்திலும், மறுமலர்ச்சி காலத்திலும் அர்ச்சியசிட்ட பட்டஞ்சூட்டும் அநேகதிருவைபவங்கள் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திற்கு வெளியேயும், ரோமாபுரிக்கு வெளியேதானும் நடைபெறலாயின. ஆனல், 1741-ம் ஆண்டு 14-ம் ஆசீர்வாதப்ப பாப்பானவர் சகல அர்ச்சியசிட்டபட்டதிருவைபவங்களும் நடைபெறுமிடமாக அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தை ஏற்படுத்தினர். அதுமுதல் சில முத்திப்பேறுபெற்ற பட்டங்கள் நீங்கலாக அர்ச்சியசிட்டபட்டமும், முத்திப்பேறுபெற்ற பட்டமும் சூட்டும் திருவைபவங்கள் அதில்தானே நடைபெற்றுவரலாயின. லத்தறன் அத்தியட்சமகாதேவாலயம் உலகஇரட்சகராகிய கிறீஸ்துநாதருக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டதாகும். இது பாப்பரசரின் அதிகாரபூர்வமான ஆசனக்கோவிலாய் விளங்குவதுடன் ரோமாபுரியிலும், உலகத்திலுமுள்ள சகலகோவில்களுக்கும் தாயும், தலைமையுமாய்த் திகழ்கின்றது. இதன் திருநாளும் இன்றுதினமேயாகும்.

—*—

## பதினன்கு புதியமேற்றிராணிமார்களைப் பாப்பரசர் அபிஷேகஞ் செய்கின்றார்

முந்திய சிலவாரங்களிலே தாம் நியமனஞ்செய்த பதினன்குபுதிய மிஷனரிய மேற்றிராணிமாரை அருளப்பபாப்பரசர் சென்றவைகாசிமாதம் 8-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் ஒருங்கே அபிஷேகஞ் செய்யலாயினர். 1906-ம்ஆண்டு பன்னிருபிரான்ஸிய மேற்றிராணிமாரும், 1926-ம் ஆண்டு ஆறுசீனமேற்றிராணிமாரும், ஜப்பானிய முதல்மேற்றிராணியாரும், 1939-ம் ஆண்டு மேலும் பன்னிருமேற்றிராணிமாரும் அம்மகாதேவாலயத்தில் கூட்டமாகஒருங்கே அபிஷேகஞ் செய்யப் பெற்றிருந்தார்கள். சென்ற 8-ந்திகதியன்று அபிஷேகஞ்செய்யப்பெற்ற பதினன்கு மேற்றிராணிமார்களிலும் இருவர் ஆங்கிலேயர். இவர்களில் ஒருவர் போணியோவைச்சேர்ந்த சறவாக்நாட்டிலும், மற்றவர் ஆபிரிக்காவைச்சேர்ந்த நைஜீரியாநாட்டிலும் தொண்டாற்றுகின்றனர். ஏனையவர்களில் ஏழுபேர் ஆபிரிக்கர். ஏனையஜவரிலும் அமெரிக்கர்ஒருவரும், ஆஸ்திரேலியர் ஒருவரும், ஜப்பானியர் ஒருவரும், மடகஸ்கார்தீவைச் சேர்ந்த ஒருவரும், ஜரிஷ்காரர் ஒருவரும் அடங்குவார்கள்.

—*—

## அமெரிக்க நீகிரோவரான கத்தோலிக்கர்

ஐக்கியஅமெரிக்க தேசத்திலுள்ள நீகிரோவரெனப்படும் காப்பிரிகளான கத்தோலிக்கரின்தொகை கடந்தபத்துவருடகாலத்திலும் 55சதவிகிதமும், அத்தேசத்தில்வசிக்கும் இந்தியரான கத்தோலிக்கர்தொகை 25 சதவிகிதமும் அதிகரித்திருக்கின்றன. அங்குதற்போது காப்பிரிகளான கத்தோலிக்கராய் 6,15,964 பேர்இருக்கின்றனர்.1950-ம் ஆண்டிலிருந்து இத்தொகை 2,17,853 பேரால் அதிகரித்துள்ளது. அங்கு தற்போதுள்ள இந்தியரான கத்தோலிக்கர் 1,24,154 பேர். இவர்கள் தொகை 1950-ம் ஆண்டிலிருந்து 24,954 பேரால் அதிகரித்திருக்கிறது. கடந்த பத்துவருடங்களிலும் அங்கே ஒருலட்சம்காப்பிரிகள் மனந்திரும்பியிருக்கிறார்கள். சென்ற வருடம்மாத்திரம் மனந்திரும்பிய காப்பிரிகள் 12,066 பேர். அத்தேசத்திலே மனந்திரும்புகிறவர்களில் ஒவ்வொரு 12பேருக்கும் ஒருவர் ஒருகாப்பிரியாவர். அத்தேசத்தில் 30,000 பேருக்குமேற்பட்ட காப்பிரிகளான கத்தோலிக்கரைக் கொண்டனவாய் ஏழு மேற்றிராசனங்கள் இருக்கின்றன.

---

- பெரிய காரியங்களைச் செய்வதற்கே நான் பிறந்தேன்.

  —அர்ச். ஸ்ரனிஸ்லாஸ்

- பூரித்த உள்ளம், எவரிலும் பார்க்க வேகமாய்ப் பரிசுத்தத்தனத்தில் முன்னேறும்.

  — அர்ச். பிலிப்பு

* * *

பேசுவது கொஞ்சமாயும், கேட்பது அதிகமாயும் இருப்பதுநலம்.

தேவனைமட்டும் ஒருவன் தன்மனதில் வைத்திருப்பானகில், அவனுக்கு வேறொன்றும் தேவையில்லை.

— அர்ச். இஞ்ஞாசியார் லோயோலா.

### நாடுகடத்தப்பட்ட லிதுவானியர்கள்

அப்போது ருஷியா ஆக்கிரமித்துக்கொண்ட பால்திக்நாடுகளில் லிதுவானியாவும் ஒன்று. 1940-ம் ஆண்டுமுதல் ருஷியகம்யூனிஸ்தர்கள் மூன்றுலட்சம் பேருக்குமேற்பட்ட லிதுவானியர்களைக் கைதிகளாக்கிச் சைபீரியாவுக்கு நாடுகடத்தியிருக்கிறார்கள். இவர்களில் சுமார் 300பேர் கன்னியாஸ்திரிமார். 400 பேர் குருமார். நால்வர் மேற்றிராணிமார். இவர்களில் இருவர் அங்கேயே இறந்துபோயினர். ஏனையவர்களில் அநேகர் சித்திரவதைகளாலும், வாழ்க்கையில்ஏற்பட்ட நிர்ப்பந்தங்களாலும் மடிந்துபோயினர். அங்குள்ள தொழில்முகாங்களின் உண்மையான நிலைபரங்களை மேற்குஉலகம் அறியாதபடி விழிப்பாகக் கட்டுக்காவல் செய்யப்படுகிறது. ஆயினும், அவர்கள்படும் உபத்திரவங்களைப்பற்றிக் காலம்தோறும் அங்கிருந்து திரும்புகின்ற ஜேர்மனியரும், இத்தாலியரும், லிதுவானியரும் எடுத்துக்கூறி வருகின்றனர். இவர்களில்ஒருவர் செபப்புத்தகம்ஒன்றின் கையெழுத்துப் பிரதிஒன்றையும் தம்மோடு கொண்டுவந்திருக்கின்றார். இது நான்கு லிதுவானியபெண்களால் ஆக்கப்பட்டது. கையெழுத்துப் பிரதிகளாக இந்தச்செபப்புத்தகம் கைதிகள்மத்தியிலே பரப்பப்பட்டுவருகிறது. தற்போது லிதுவானிய, இத்தாலிய, ஆங்கில பாஷைகளில் இது அச்சிடப்பட்டிருக்கிறது.

---

### இந்திய பாராளுமன்றமும் கத்தோலிக்க அங்கத்தினரும்

லோகசபையென அறியப்படுகின்ற இந்தியபாராளுமன்ற அங்கத்தினராய்த் தற்போது ஆறு கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர் இவர்களில் (1) பம்பாய் நகரைச்சேர்ந்த திரு. ஜுவக்கீம் அல்வா இந்தியாவிலே பிரஸ்தாபம்பெற்ற ஒருகத்தோலிக்கர். (2) பாலாயைச் சேர்ந்த திரு. ஜோர்ஜ் தோமஸ் கொட்டுகப்பள்ளி ஒருதோட்ட முதலாளியும், வங்கித்தலைவருமாவர். (3) திரு. மத்தியூ, மணியன்கடன் கோட்டையத்தைச்சேர்ந்த ஓர்வழக்கறிஞர். (4) திரு. இக்னேஷஸ் பெக், இவர் பீஹாரைச்சேர்ந்தவர். (5) திரு. யோசெவ் மற்தன், ஒருவழக்கறிஞர். அலெப்பியைச் சேர்ந்தவர். காங்கிரஸ்கட்சியில் கடந்த இருபதுஆண்டுகளாக இவர் ஓர்அங்கத்தவராய் இருந்துவருகிறார். (6) திரு. தோமஸ் ஸ்ரீனிவாசன், இவர் திருச்சிராப்பள்ளியிலுள்ள அர்ச். சூசையப்பர் கல்லூரியிலே கடந்த35ஆண்டுகளாக ஓர்விரிவுரையாளராய் இருந்துவருகிறவர். தமது18-ம்வயதில் மனந்திரும்பியஇவர் கடந்த 38வருடங்களாக ஒருகத்தோலிக்கராய் இருந்துவருகின்றார். அரசியல்விஞ்ஞானத்தில் இவர் சிறந்த ஓர் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

ஆனி —1960

5 ஞா. பெந்தக்கோஸ்து (இஸ்பிரீத்து சாந்துவின் திருநாள்) 1-ம் வகுப்பு (சி)
6 தி. பெந்தக்கோஸ்து திங்கள் (சி)
7 செ. பெந்தக்கோஸ்து செவ்வாய் (சி)
8 புத. சதுர்காலப் புதன் (சி)
9 வி. பெந்தக்கோஸ்து வியாழன் (சி)
10 வெ. சதுர்காலவெள்ளி (சி)
11 ச. சதுர்காலச்சனி (சி)

சத்திய வேத

# பாதுகாவலன்

1960-ம் ஆண்டு
ஆனிமாதம் 2-ந் திகதி

## ஆனி மாதம்

மனுமக்களை அணைகடந்தவிதமாய் நேசித்து, அவர்கள்பால் அளவற்ற இரக்கதயாளம் காண்பித்து, அவர்களது இரட்சணியத்தின்மட்டிலே அல்லும்பகலும் தணியாத ஆவலுடையதாய் இருந்துவருகின்ற திவ்வியயேசுவின் திருஇருதய வணக்கமாதம் பிறந்திருக்கிறது. "இதோ! மனிதரை அவ்வளவாக நேசித்த இருதயம்" என்று தன்னைத் தானே காண்பித்து, தன்பக்கமாக மனிதஇருதயங்களை அன்பால்ஈர்ந்துகொள்ளும் திருஇருதய வணக்கமாதம் வந்திருக்கின்றது. தேவஅன்பின் சிங்காசனமும், இரக்கத்தின்சிம்மாசனமும், மனுக்குலத்தின்நன்றிக்கும், வணக்கத்துக்கும்பாத்திரமுமான திருஇருதயத்தை நாம் விசேடவிதமாகப் பக்திசெய்வதற்கெனத் திருச்சபையாலே நேர்ந்துகொள்ளப்பெற்ற ஆனி மாதம் இதோ! பிறந்திருக்கின்றது.

நம்முடைய திவ்விய கர்த்தர் அர்ச். மார்க்கரித்து மரியம்மாளுக்கு அளித்தகாட்சிகளிலே மனிதர் தம்மைப்புறக்கணித்து அவமதிப்பதைப்பற்றியும், அவர்கள் தம்மைவிட்டுத் தூரஅகன்று போய் இருப்பதைப்பற்றியும் அடிக்கடி முறையிட்டிருக்கின்றார். தம்மை நேசிக்கத் தக்கதாக அவர்கள் தமதுஇருதயத்தை நன்குஅறியப்பண்ணுவதே தம்முடைய தணியாத ஆசையென்று அறிவித்திருக்கிறார். தாம்அனுபவித்த கஸ்திவாதைகளுக்கும், நிந்தை அவமானங்களுக்கும் பரிகாரமாக அவர்கள் தம்மை அறிந்து, நேசித்து, மகிமைப்படுத்த வேண்டுமென்ற வேகரமான ஆசையை வெளியரங்கமாகத் தெரிவித்திருக்கின்றார். அதனால் நாமெல்லாம் இந்தமாசத்திலே யேசுவின் திருஇருதயத்தை யாவரும் அறியப்பண்ணுவதாலும், அறிந்து மகிமைப்படுத்தச் செய்வதாலும், அதன்நேசத்துக்குப் பிரதிநேசம்காண்பித்து, அதற்குச்செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்குத் தகுந்தபரிகாரம் பண்ணுவதாலும் நாம் உண்மையான திருஇருதயபக்தர்களென்று நம்மைக்காண்பிக்க வேண்டும்.

அதனால்நாம் தேவமாதாவின் வணக்கமாதத்தை அத்திருத்தாயாருக்கு உகந்தவிதமாய்க் கொண்டாடுவதற்கு எத்துணை பிரயாசைஎடுத்தோமோ அத்துணைபிரயாசையை அவரின் திருக்குமாரனது திருஇருதய வணக்கமாதத்தைக் கொண்டாடுவதற்கும் எடுப்போமாக! தேவன் நேசமாயிருக்கிறார். கரைகாணாத அன்பின்சமுத்திரமாகிய திவ்விய இரட்சகர் இந்தநேசத்தைத் தமதுசெயல்களால் நிருபித்திருக்கிறார். அவர் நமக்காக மனுஷனாய்அவதரித்தார். மனுஷர்களில் ஓர்மனுஷனாய்ச் சஞ்சரித்தார். நமதுமீட்சிக்காகக் கடினபாடுகளைப்பட்டார். சிலுவையில் அறையுண்டு சீவபலியானார். நம்முடன் ஐக்கியமாயிருக்க அன்பின்தேவதிரவிய அனுமானத்தைஏற்படுத்தினார். இவ்விதம்நிருபிக்கப்பட்ட திவ்வியஅன்பின் சிங்காசனம் அவருடைய திருஇருதயமே. அர்ச். மார்க்கரித்து மரியம்மாளுக்கு அளித்த காட்சியிலே அவருடையதிருஇருதயம் நேசாக்கினிச் சுவாலைவீசுவதாய்க் காணப்படலாயிற்று. ஆகவே, அவர் "என்னைச் சிநேகித்து எனக்காகத் தம்மைக்கையளித்தார்" என்பதை இந்த மாதத்திலே நாம் அதிகமதிகமாக நினைவுகூர்ந்துஅவருடையநேசத்தின்சாயலை எப்போதுமே நமது மனக்கண்முன்பாக நிறுத்திவைப்போம். நமக்காகஇடையறாது சிநேகாக்கினியால் பற்றியெரிந்துகொண்டிருக்கும் திருஇருதயத்தின் சிநேகத்திற்குப் பதில்சிநேகம் காண்பிக்கப் பிரயாசையெடுப்போம்.

---

### பரீட்சார்த்தமாக ஓடியபஸ்

நாவலப்பிட்டிக்குச்சமீபமான மீப்பிட்டியிலே இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச்சொந்தமான பஸ் ஒன்றைச் சென்றவெள்ளிக்கிழமை பரீட்சார்த்தமாக ஓட்டிச்சென்றபோது சுமார்நூறுஅடிபள்ளத்தில் விழுந்து சுக்குநூறாக நொருங்கியது. அதில்சென்றபஸ்காரியாலயலிகிதரும், ஏனையமெக்கானிக்குகளும் படுகாயங்களுடன் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். இவர்களில் மூவரின்நிலைமை மோசமாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### தேர்தலும் அதன்முடிவுகளும்

ஆடிமாதம்20-ந்திகதியன்று நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல்முடிவடைந்து 145தொகுதிகளினதும் தேர்தல்முடிவுகள் அன்றிரவே வெளியாகக்கூடும்போல் இருக்கிறது. சென்ற பங்குனி19-ந்திகதிப் பொதுத்தேர்தலில் 898அபேட்சகர்கள் போட்டியிட்டதற்குப்பதில் இந்தத்தேர்தலில் 393 அபேட்சகர்களே போட்டியிடுவதாலும், சிலகட்சிகளின் போட்டித்தவிர்ப்பு ஒப்பந்தங்களாலும், தேர்தல் அதிகாரிகள் சென்றபொதுத்தேர்தலில் பெற்றஅனுபவத்தாலும் இதுசாத்திகமாகலாமென நம்பப்படுகிறது.

### பரிதாபகரமான மரணம்

கழுத்துறையிலே அக்ஸ்வெலிதோட்டத்தைச்சேர்ந்த 30வயதுடைய என். பெரியசாமிஎன்பவர் சென்றவியாழக்கிழமை மாட்டிற்கென்று புல்வெட்டிப் புல்லுக்கட்டைத் தலையில்வைத்துச் சுமந்துசென்றபோது வழியிலே மின்சாரக்கம்பிஒன்று அறுந்துதொங்கித் தலையில்இருந்த புல்லுக்கட்டைத் தடுக்கவே, அவர் தனது இடதுகையால் தடையைநீக்கமுயன்றார். முயன்றபோது மின்சாரத்தால் தாக்குண்டு [illegible]



## சதாசகாயமாதா கோணம்

## மருந்தில்லாது மாயமாய் மாறிய நோய்

பீற்றரின்தாய் நோய்கண்டு மிகவும் வருந்தினாள். வருத்தக்காரியாகவிருந்தாலும் பார்க்கவேண்டிய சோலிகள் பலவிருந்தன. அவற்றில் நான்கு பிள்ளைகளைப் பராமரிப்பது பெருந்தொல்லையாகவிருந்தது. பிள்ளைகளின் பிதா மரித்து ஆண்டுகள் சிலவாயின. குடும்பபாரம பீற்றரின்தாய் திரேசாவில்தான் தங்கியிருந்தது. முட்டும் மூச்சும், இளைப்பும் தவிப்பும் அவளை வாட்டும்போதெல்லாம் தன் பிள்ளைகளின் கதியைநினைத்து அவள் கலங்குவாள்.

தாயைப்பற்றிய கவலை பீற்றருக்கு. ஏனெனில், அவன் தாயை வெகுவாக நேசித்தான். ஆனால், பத்துவயதுப் பாலனால் என்னசெய்யமுடியும்? பாடசாலைக்குப் போய்த் திரும்பிவந்தபின் அதிகமானநேரத்தைத் தாய்க்குத் தன்னால் இயன்றஉதவி செய்வதில் செலவழிப்பான்.

"அவர் பெரிய கெட்டிக்காரர்; பெயர்பெற்ற வைத்தியர்; எல்லா நோய்களையும மாற்றவல்லவர்; அவரிடம் நான் செல்லக்கூடுமென்றால் எவ்வளவு நல்லது; 12 மைல் தூரத்தை நடக்க என்னால் முடியாது; நடந்தால் வழியில் செத்துப்போவேன்" என்று தாய் பலமுறைகளில் பீற்றருக்குச் சொல்லுவாள்.

அவளது வீரச்சிறுவன் ஒருஞாயிறுவாரம் காலை ஏதோவிதமாக அவ்வளவு தூரத்திலுள்ள வைத்தியரிடம்சென்று தேவையானமருந்தைப் பெற்றுவரத் தாயிடம் உத்தரவு பெற்றுக்கொண்டான். அவனைத் தனியே விடத் தாய்க்கு முற்றிலும் விருப்பமில்லை. ஏனெனில், அவன் ஒருபாலியன். அவன் கெஞ்சிக்கெஞ்சிப் பலநியாயங்கள் காட்டியபின் ஒருவாறு சம்மதித்தாள் தாய். "சரி, நீ போகலாம்; ஆனால், கவனம்; வழியிலே வைத்தியரின்வீடிருக்கும் சரியான இடத்தைக் கேட்டறிந்துகொள்; எனது நோயின் தன்மையை விபரமாக வைத்தியரிடம் தெரிவி; அவர் கட்டாயம் நல்ல மருந்து கொடுப்பார்" என்று சொல்லிப் பாலியனைப் போகவிட்டாள்.

பீற்றர் மத்தியானம்போல் குறித்த கிராமத்தைப் போய்ச்சேர்ந்தான். வைத்தியருடைய வீட்டைக்கண்டதும் அவன் சற்றுத்தயங்கினான். பிரமாண்டமான கேற்று, விசாலமான பூந்தோட்டங்கள், பென்னம்பெரிய மாளிகைபோன்றவீடுமுதலியவற்றைக் காணலாமென எண்ணியிருந்தான். ஆனால், அவற்றிற்குப்பதில் அவன்கண்டது ஒருசாதாரணஅறைதான். வைத்தியர் ஒருகாடுமுரடான மேசையருகே இருந்தார். மேசையின்மேல் பல மருந்துப்புட்டிகளும், சில பழைய [illegible]களும் இருந்தன.

பீற்றர் தான்வந்த விஷயத்தைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் வைத்தியரிடம் தெரிவித்தான். அவன் சொல்லியவற்றைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த வைத்தியர் வெகுநேரம் யோசனைசெய்தபின் "உன்னுடையதாய்க்கு இருதயநோய்" என்று கூறிவிட்டு மருந்துதயாரிக்கத்தொடங்கினார். அரைமணிநேரத்தில் பையனின்கையில் ஒருசரையை வைத்து, "இதில் 20 குளிகைகள் உண்டு; பகற்போசனத்துக்குமுன் ஒவ்வொருநாளும் ஒருகுளிகை சாப்பிடவேண்டும்" அவ்வளவுந்தான். வேறு பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. பையன் தான்கொண்டுவந்த இரண்டுரூபாவையும் மேசையில் வைத்துவிட்டு விடைபெற்றுச் சென்றான்.

வெளியேவந்த பீற்றர் நீண்ட உச்சுவாசம் செய்துகொண்டு, "நான் இங்கு வந்ததையிட்டுச் சந்தோஷமடைகிறேன்; அம்மாவுக்குப் பூரண சுகங்கிடைக்கும்; வீடுசெல்லும்பாதையூடே ஓடிச்செல்வேன்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

போகும்போது ஒரு நாற்சந்தியில் சற்று இளைப்பாறத் தங்கினான். சமீபத்திலிருந்த அருவியில் தாகசாந்தி செய்தான். அந்த மருந்துக்குளிகைகள் என்ன மாதிரியானவையெனப் பார்க்கவேண்டுமென்ற அவா மேலீட்டால் சட்டைப்பையில் கையைவைத்தான். மருந்துச்சரையைக் காணவில்லை. திரும்பத்திரும்பத் தேடினான். சட்டையைக் கழற்றி உதறினான். சரை மாயமாக மறைந்துவிட்டது. பையனுக்குத் தூக்கிவாரிப் போட்டதுபோல் இருந்தது. சலஞ்சலமாக வியர்வை கொட்டியது. "ஐயோ, நேரம்போய்விட்டதே; நான் என்ன செய்யப்போகிறேன்? மருந்தில்லாமல் நான் எப்படி அம்மாவிடம் செல்வது? அம்மாஎன்னைப்பற்றிஎன்னநினைப்பா?" என்று நினைத்து ஏங்கினான்.

உடனே சதாசகாயமாதாவை நோக்கி மன்றாடத்தொடங்கினான். அவனுக்கு ஏற்படும் இடைஞ்சல் இக்கட்டுகளில், கஷ்டதுன்பங்களில் சதாசகாயமாதாவின் துணையைத் தேடும்படி அவன்தாய் அவனுக்குக் கற்பித்திருந்தாள். சதாசகாய மாதாவை நோக்கிமன்றாடத் தலையை நிமிர்த்தியபோது அவனுடைய பார்வை ஒரு "வழிகாட்டி"பால் சென்றது. அதில் "திருசேத்திரத்துக்கு" என்று பொறிக்கப்பட்டிருந்தது. உடனே தானே சதாசகாயமாதா திருசேத்திரத்துக்கு இட்டுச்செல்லும் பாதைவழியே சென்றான்.

நடுப்பீடத்திலே திருப்பாலனைக் கையிலேந்தியவண்ணம் சதாசகாய மாதா ஓர்உண்மையான இராக்கினி போன்று காட்சியளித்தா. பாதத்தடியில் பலவகைப்பூக்கள் பரப்பப்பட்டிருந்தன. பையன் மாதாவுக்குமுன்பாக முழந்தாளில்இருந்து விம்மிவிம்மி அழுதுகொண்டு:

"ஓ மரியாயே! என்நல்லதாயாரே! என் அம்மாவின் மருந்தை எங்கேயோ போட்டுவிட்டேன்; உம்மால் அவவைச் சொஸ்தமாக்கமுடியும்; அவவுக்குச் சுகத்தைக் கொடும்; பரலோக ஆச்சி! என் அம்மாவை ஆசீர்வதியும்" என்று அழுகையோடும், பெருமூச்சோடும் உருக்கமாக வேண்டிக்கொண்டான். பின்பு கோவிலைவிட்டு வெளியேறினான். அவனுடைய இருதயத்தில் ஒரு சந்தோஷம் பிறந்தது. எல்லாம் நன்மையாகமுடியும் என்ற நம்பிக்கையும் பிறந்தது. குறுக்கு வழியொன்றால் விரைவில் வீடுபோய்ச் சேர்ந்தான். சேர்ந்ததும் என்ன ஆச்சரியம்! என்ன அற்புதம்! படுக்கைவிட்டெழுந்து குணமடைந்தவள்போல் அவனை மலர்ந்த முகத்துடன் எதிர்கொண்டு அழைக்கவந்த தாய்க்கு அவன் சொன்னதாவது:

"அம்மா! வைத்தியரின்குளிகைகள் அல்ல உங்களுக்குச் சுகம்கொடுத்தது; சதாசகாயமாதாவின் ஆசீர்வாதம் இங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனிமாதம்

பொதுக்கருத்து: சகலகிறீஸ்தவர்களும் ஒரேவிசுவாசம் — ஒரே திருச்சபையிற்சேரத் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரின் சலுகையை உருக்கமாக வேண்ட மன்ருடிக் கொள்வது.

மிஷன்கருத்து: இன்னும் முன்னேற்றமடையாத நாடுகளுக்குக் கத்தோலிக்கர் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஆத்தும சரீர நன்மைகள் புரிய வேண்டிக்கொள்வது.

### காலையில் ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

## முதல் வெள்ளி முதற் சனி

—*—

நாளை (3-6-60) வெள்ளிக்கிழமை முதல்வெள்ளி–மறுநாள் முதற்சனி

தொடர்பாக ஒன்பதுமாதங்களிலே முதல்வெள்ளிக்கிழமைதோறும் திவ்வியநன்மை வாங்குகிறவர்களுக்குப் பாக்கியமான மரணமடையும் வரப்பிரசாதத்தை அருள்வதாக நமது திவ்வியகர்த்தர் வாக்களித்திருக்கிருர்.

தொடர்பாக ஐந்துமாதங்களிலே முதற்சனிக்கிழமைதோறும் திவ்வியநன்மைவாங்கித்தேவஇரகசியங்களைத்தியானித்துக்கொண்டு 15 நிமிஷநேரம் செபமாலை செபிக்கிறவர்களுக்கும் அதேவாக்குத்தத்தத்தைப் பரிசுத்த தேவதாயார் அளித்திருக்கின்ருர்.

## சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

### 13. பன்னிரண்டாம் பராயம் — லூ. [illegible]41-52

(1) பாஸ்கா (41) — இது இஸ்ருயேலர் எகிப்து [illegible]மைத்தனத்தில் நின்று இரட்சிக்கப்பட்ட ஞாபகத்திருநாள். பாஸ்கா என்[illegible]து அர்த்தம் கடத்தல். அதாவது, எகிப்துதேசத்தில் தலைப்பேருபிருப்ப[illegible]ளைக் கொல்லு [illegible]

[illegible] வென்ருல, "நான [illegible] இருக்கிறேன்; ஆகையால், நான் ஒருபோதும் காணமறமபாயத [illegible] முடியாது." யேசு தேவாலயத்தைக் கருதியிருந்தால், மரியாயும், சூசையப்பரும் இலேசாக விளங்கியிருப்பார்கள். தேவபிதாவின் மடியைக் கருதினுர் என்று பிறகு அறிந்திருந்தபடியாற்ருன் அந்நேரத்தில் தங்களுக்கு விளங்கவில்லை என்ருர்கள் (50-ம் வச.).

(4) தன்னிருதயத்தில் (51) — மரியாயின் இருதய சிந்தனையைப் பற்றி லூக்கா இருமுறை சொல்லுகிருர் (ii. 19, 51). இதைப்பற்றி அவர் ஒன்றில் நேரே மரியாயிடமிருந்து, அல்லது மரியாயோடு நல்ல பழக்கமானவரிடமிருந்து (உதாரணமாக, அருளப்பரிடமிருந்து) அறிந்திருக்கவேண்டும்.

(5) வளர்ந்து (52) — லூக்கா இருமுறை யேசுநாதரின் வளர்ச்சியைப்பற்றிச் சொல்லுகிருர் (ii. 40, 52). யேசுநாதர் தேவனுயிருந்தாலும் மனிதசுபாவத்தில் அவருக்குப் பிராயத்திலும், பலத்திலும் வளர்ச்சிஇருந்தது. அவருடைய மனிதபுத்தி தேவதரிசனத்தால் பூரண அறிவைப் பெற்றிருந்தாலும் அது அனுபவ அறிவில் வளர்ந்துவந்தது. அவருடைய ஆத்துமம் மனித அவதாரம் தொடங்கித் தேவப்பிரசாதத்தால் நிரம்பி இருந்தாலும் அந்தப் பிரசாதத்தின் பயன்கள் வரவரக் கூடத் துலங்கின.

## அழகி அமுதா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வைக்கெடுத்தாய், உன் அழகின் பெயரால் எண்ணெயின்றி, உடுத்தநல்ல துணியின்றி இருந்த ஏழைமக்களை வெறுத்தாய் உனது அழகின் ஆணவத்தால். அதோபார்! ஏழையென்று நீ வெறுத்துஒதுக்கியதெரேசா தன்கணவனுடன்—கொஞ்சும்மழலைக் குழந்தையுடன் சிங்காரநடைநடந்து செலவதைப் பார். அவள்முகத்தில் என்ன ஆனந்தம்!

ஆண்டவன தந்தஅழகை ஒழுங்காகப் பயன்படுத்தினுயா? அவருக்கு நீ நன்றிசெலுத்தினுயா? இல்லை. பெருமைகொண்டாய். உலகவாழ்வுஎன்ருல் அழிந்துபோகும் இன்பத்தின்உச்சியை எட்டிப்பிடிக்கவேண்டும்; எங்கும்இன்பம் என்றுதான் இருக்கவேண்டுமென்றுகூறும் மடையர்களைப்போலல்லவா ஆகிவிட்டாய். ஆனுல், உலகவாழ்வு எது? ஒழுங்குபடவாழ்வது. அதாவது தன்னைப்படைத்த ஆண்டவனைமறவாமல் நன்றிஉள்ளம்கொண்டு ஏழைஎளியவரின் துயர் துடைத்துப் பலலோர் போற்ற நல்லவளுய்விளங்குவது. இதுதான் இவ்வுலகின் இன்பம். இதைமறந்து நீ எதையெல்லாமோ இன்பம்என்று நினைத்தாயே. பார்த்தாயா உனதுஇன்பத்தின் முடிவை. இன்பத்தைஅளித்த அழகின்முடிவை. இவ்வாறெல்லாம் நினைத்துக்கொண்டு கண்ணீர்சொரிந்து தள்ளாடித்தள்ளாடி நடந்துவந்தாள். மயக்கம் அவளைப்பிடித்துக் கீழே தள்ளியது. வீதியில்சாய்ந்தாள். இல்லை, இவ்வுலகைவிட்டு அமுதாமறைந்தாள். ஆம், திடீரென அப்பக்கம் வந்தகார் அவள்மீதுமோதி அவளை உருத்தெரியாமல் சிதைத்துவிட்டது.

அவளது அந்தநிலை பலருக்குஎச்சரிக்கை செய்வதுபோல்இருந்தது. தோழர்களே! எனது அழகைப் பாருங்கள்; அழிந்துபோகும் அழகுக்காக நான் இந்தஉலகையே மதிக்கவில்லை; இந்த உடலை எவ்வளவோ அழகுசெய்தேன்; ஆனுல், கடைசியில் அழகின்முடிவைப் பார்த்தீர்களா? இனியாவது திருந்துங்கள். இந்த அழகியின் இச்சம்பவம் உங்கள்மனதில் என்றும்இருக்கட்டும் என்றுகூறுவதுபோல் இருந்தது.

வணக்கம்

[யாவும் கற்பனையே]

---

தப்புதுமையைச் செய்தது" என்று கூறித் தாயைத் தழுவி முத்தமிட்டான். தாயும், மகனும் தவருது உதவிசெய்யும் சதாசகாய மாதாவுக்கும், சர்வவல்லப தேவனுக்கும் தோத்திரம் செய்தார்கள்.

## திருமண செம்பொன் யூபிலிவிழா

கொழும்பிலே கொட்டாஞ்சேனையில் சஞ்சரிப்பவர்களான எஸ். டி. ஸ்ரனிஸ்லாஸ்தம்பதிகள் தங்களது திருமணஐம்பதாம்வருட செம்பொன் யூபிலிவிழாவைச் சென்றவைகாசி மாதம் 10-ந்திகதிசெவ்வாய்க்கிழமை கண்டுகளிக்கும் பெரும்பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அதனைக் கொண்டாடுமுகமாக அன்றுகாலை சந்தலூசியாவின் அதிமேற்றிராசனக் கோவிலில் நிறைவேறிய யூபிலித்தோத்திர பெரியபாடற்பூசையின்போது அவர்களின்சுற்றததவர்களும், சிநேகிதர்களும் பெருந்திரளாகச் சமுகமளித்திருந்தகாட்சி பெரிதும் மனேகரகாட்சியாயிருந்தது. யூபிலிநாயகதம்பதிகளின் சுற்றத்தவர்களில் ஒருவரான வண. றூபஸ் பெனடிற் சுவாமியவர்கள் யூபிலித்தோத்திர பாடற்பூசையை நிறைவேற்றினுர். பரிசுத்தபிதா அருளப்பபாப்பரசர் ஆசிதெரிவித்து யூபிலிநாயகர்களுக்கு அனுப்பியிருந்த வத்திக்கான் கேபிள் தந்தி அத்தருணம் யூபிலிநாயகரின் சகோதரரான அதிவண. எஸ். இம்மனுவேல் சுவாமியவர்களால் அவர்களுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும், மருகர்கள், மருகிகளுக்கும் படித்துக் காட்டப்பட்டது. அதிலே பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. "திருமணத் தங்கயூபிலிவிழாச் சுபசந்தர்ப்பத்திலே ஸ்ரனிஸ்லாஸ் தம்பதிகளுக்குப் பரிசுத்தபிதா அவர்கள் தந்தைக்குரிய தமதுஅப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை இதயபூர்வமாக வழங்குகின்ருர்" என்பதே.

---

### வணக்கமாத முடிவுவிழா

பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே வணக்கமாதமுடிவுவிழா சென்ற29-ந்திகதிஞாயிற்றுக்கிழமை வழமைபோலச் சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. அன்று காலை 7-15மணிக்கு வண. எல். ஆர். அன்ரனி சுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம அதிவண. ஜே. புரோகான சுவாமியவர்கள் வேஸ்பர்பாடினுர். அதன்மேல் தேவதாயாரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடைபெற்றுத் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடன் விழா நிறைவாயிற்று. வழமைபோலப் பாப்பரசரின் கைற்பட்டவர்த்தனரான சவிரிமுத்துசந்திரசேகர முதலியாரின் இனசனரது உபயத்திலே திரு. விக்றர் செரூபிம் [illegible] வைச் [illegible]

## அடைக்கலப் பிதாவின் தினம்

கொழும்புத்துறைத் தாபனத்திலே கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அடைக்கலப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரின் அடைக்கலதினம் சென்ற28-ந்திகதி சனிவாரம் வழமைபோலப் பக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை 6-30 மணிக்குத் தாபனஅதிபர் வண. பி. தியோகுப்பிள்ளை சுவாமியவர்கள் வனப்புவாய்ந்த இயற்கைமலர்கள், செயற்கைப்புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்றுத் தேசோமயமாய்விளங்கிய ஆலயபலிபீடத்தில் ஆசிரியர்களும், ஆசிரியைகளும், ஆசிரியகலாசாலை மாணவர், மாணவிகளும், மற்றும் அநேக பக்தர்களும் திரளாகக்குழுமியிருந்தசமுகத்தில் பாடற்பூசை நிறைவேற்றினுர். பிற்பகல்4-30மணிக்குப் பக்தர்குழாம் திரளாகச் சமுகமளித்திருக்க வண. அதிபர்சுவாமியவர்கள் வேஸ்பர்பாடினர். அதன்மேல் பக்தகோடிகள்புடைசூழ மணியோசைகள், செபவோசைகள், இனியசங்கீதவோசைகள் மத்தியிலே தமதுதிருமகனுருடன் சஞ்சூசைமாமுனிவர் அழகிய பூந்தேர்மீது பவனிவந்து தாபனமைதானத்தின்முன்பாக அமைக்கப்பெற்றிருந்த சிங்காரபீடத்தில் எழுந்தருளியதும் யாழ்ப்பாணம், பரிசுத்தஅடைக்கலமாதாகோவில் கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளை சுவாமியவர்கள் "நீர் எழுந்திருந்து, குழந்தையையும், அதன்தாயையும் அழைத்துக்கொண்டு எஜிப்துதேசத்திற்கு ஓடிப்போய் நான்உமக்குச் சொல்லுந்தனையும் அங்கேயிரும்" என்று ஆண்டவருடையதூதன் சூசையப்பருக்குக் கூறிய சுவிசேஷவாக்கைப் பீடிகையாகக்கொண்டு உணர்ச்சிததும்ப அருட்சிக்குரியதோர் பிரசங்கஞ்செய்தார். அதன்மேல் எமதுமேற்றிராணியாண் [illegible] விசுவாசிகளீருகச் சகலரும் [illegible]வவளனுரின் தவருத அடைக்கலத்தில் ஒப்படைக்கப்பெற்ருர்கள். அதன்மேல்திருப்பவனி ஆலயத்தைத் திரும்பஅடைந்ததும் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும், திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பெற்று அடைக்கலப்பிதாவின்தினம் இனிதேநிறைவாயிற்று.

---

### வத்திக்கான் பத்திரிகையின் புதிய ஆசிரியர்

"ஒஸர்வாத்தொ றெ ரோமானோ" என்ற வத்திக்கான் தினசரிப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்து கடந்த 40ஆண்டுகளாகப் பெரும்பிரஸ்தாபத்துடன் கடமையாற்றி வந்தவரான கவுண்ட் ஜியுசெப்பி தல்லா தொறெபிரபு தமதுபதவியிலிருந்து சமீபத்தில் தம்முடைய 75-ம்வயதிலே இளைப்பாறியிருக்கின்ருர். இவரிடமாக அப்பத்திரிகையின் புதியஆசிரியராகச் சிஞ்ஞோர் றேய்மொந்தோ மான்ஸினிஅவர்கள் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்ருர். அன்று இவருக்கு அருளப்பபாப்பரசர் பேட்டியளித்துத் தமது ஆசியளித்துச் சகலவிதஅனுகூலங்களையும் ஆசிக்கலாயினர். சிஞ்ஞோர் மான்ஸினிஅவர்கள் அப்பத்திரிகையின் முன்னுள் ஆசிரியரான தொறெபிரபுவுடன் பேட்டிக்குச்சென்றிருந்தார். சில தினங்களின்முன் பாப்பரசர் வத்திக்கான் பத்திரிகைக்கு 40வருடகாலம் ஆற்றிய சேவையைப் பாராட்டிப் பிரபுவுக்கு 9-ம்பத்திநாத பாப்பானவரின் மகத்தான வரிசைக்குரிய மகிமைச்சிலுவையைச் சந்மானிக்கலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

அன்புமிக்க இளைஞர்களே !

ஞானப் பிதா.

—(⌣)—

# அன்னைமரியின் அன்பிலே......

—செல்வி 'ஜீவா'—

ஓர் வறியகுடும்பத்தில் நான்கு பெண்களுக்கும், இருஆண்களுக்கும் செல்வத் தங்கையாகப் பிறந்தாள் மேரி. குடும்பத்தில் கடைசிப்பிள்ளை யென்றால் அவர்களிடத்தில் கூடிய அன்புவைப்பது யாருமேமறுக்கமுடியாத உண்மை.

பெற்றோரால் மேரி மிகஅன்பாக வளர்க்கப்பட்டாள். மேரியும்வளர்ந்து, பருவப்பெண்ணாகித் திருமணப் பக்குவம் அடைந்தாள், பின் பெற்றோரின் கடமைப்படி மேரிக்கு ஓர் வரன்தேடும்முயற்சி தொடங்கிவிட்டது. அவளின்மூத்தசகோதரன் அம்முயற்சியில் ஈடுபட்டான். மேரியின் மனதிற்கேற்றமணாளனும் அகப்பட்டான். கத்தோலிக்க சமயாசார முறைப்படி ஜோனுக்கு இரண்டாந் தாரமாக மேரி மனைவியானாள்.

ஜோனும், மேரியும் இணைபிரியாச் சதிபதிகளாய் வாழ்ந்துவரும் நாளில் இல்லற இன்பம்விளங்க இருபதுவருடங்களில் ஒன்றின்பின் ஒன்றாய்ப் பத்துப்பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். ஆனால், அவர்களுள் ஐந்து பெண்களும் ஒருஆணுமே சிவந்தராயிருந்தனர். இரண்டுமூத்தபெண்களுக்கும், மூன்று இளையபெண்களுக்கும் இடையே உள்ளவன் அருள். பிள்ளைகள் பிறந்ததும் தந்தையின் பிழைப்பும்குறைந்துவிட்டது. இதனால்அவர்களை வறுமைவாட்டத் தொடங்கியது. பிள்ளைகளைவளர்க்கவேண்டுமே. மேரி என்செய்வாள். கூலிக்குவேலை செய்து கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் சோறுபோட்டாள். இதுமட்டும் போதாதென்றெண்ணிப் பிள்ளைகளுக்குக் கல்விபுகட்ட முற்பட்டாள். ஆனால், தந்தைக்கோ பிள்ளைகளைப் பற்றிய கவலையேஇல்லை. அன்னை கல்விவாசனையே அறிந்திராதவள். எனினும், தம்பிள்ளைகளைப் படிப்பிக்கவேண்டும், ஓர் உயர்நிலையில் வைக்கவேண்டும்என்றே அயரா ஆசைகொண்டாள். கணவருக்கு உழைப்பில்லை. பிள்ளைகளையும் படிப்பிக்கவேண்டும். இந்நிலையில் பிள்ளைகளுக்காக மேரிஎதுவும்செய்யத்தயாராளுள் என்பதை "என் உயிருள்ள வரை உங்களை நன்நிலையில்வைக்க என் சரீரத்தைச் சாறாய்ப்பிழியவும் தயார்" என்றுஅடிக்கடி அவள்கூறும் வாக்கியமே சான்றுபகரும்.

மேரி தேவதாயார்மேல் அளவு கடந்த அன்புடையவள். தினமும் செபமாலைசொல்லி, தனது கஷ்டங்களை மாதாவுக்கு முறையிடுவாள். மூத்தஇருபிள்ளைகளும் படிப்பை நிறுத்திவிட்டு வீட்டில் தாய்க்குதவியாக இருந்தனர். மேரி பிள்ளைகளின் நலனுக்காக அரும்பாடுபட்டுப் பயனும் பெற்றாள். இளையபெண்கள் இருவரைக் கன்னியர்மடத்திலும், அருளைக் குருமாரிடத்திலும் கல்வியுடன், கடவுட்பற்றும்வளர எண்ணி ஒப்படைத்தாள்.

தாயாரின் விருப்பை நிறைவேற்றும் மனத்தினராய்ப் பிள்ளைகள் கல்வியிலே கண்ணும், கருத்தும் செலுத்தினர். சிலவருடங்களில் அருள் எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்திபெற்றான். குடும்பத்தின் கஷ்டநிலையை உணர்ந்த அருள் குருமாரின் உதவியுடன் ஓர்பாடசாலையில் ஆசிரியரானான். கன்னியர்மடத்தில் கல்விபயின்ற இருபெண்களும் எஸ் எஸ்.சி. பரீட்சையிற்தேறியதும் வீட்டிலேயே வசிக்கலானார்கள்.

முப்பதுவருடங்களாக வாக்குவாதமே செய்திராத ஜோனும், மேரியும் நாளடைவில் பகைவரானார்கள். காரணம் தம்பிள்ளைகளைக் கலாசாலைக் கல்விபுகட்ட வேண்டுமென்பது தாயின்அவா. அதை நிறுத்திவைக்கவேண்டுமென்பது தந்தையின் அவா. வீட்டிலோ மணம்முடிக்கும் பக்குவத்தில் மூன்று பெண்கள். தாய் என்செய்வாள். தனயனும் கலாசாலைப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டான். தனது நகைகளையெல்லாம்விற்றுத் தனயனைக் கலாசாலைக்கு அனுப்பினாள். இதனால் தன் மனைவிமேல் ஜோனுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

அன்று மாசித்திங்கள். ஓர்நாள் ஜோண் தன்மனைவியையும், பிள்ளைகளையும்வீட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டார். இவருடன் இருந்தால் பிள்ளைகளைப் படிப்பிக்க முடியாதென்றுஎண்ணி மேரிபிள்ளைகளுடன் எவ்வித ஆயத்தமுமின்றி வீட்டைவிட்டு வெளியேறினாள். வெளியேறும்போது அவள் மாதாவைப்பார்த்து: "மரியே நீர் முன்சென்று வழிகாட்டும்; நான் என் பிள்ளைகளுடன் உம்பின்னால் வருகிறேன்" என்று இரந்தாள்.

ஆம், அமலனின்தாய் அருள்பாலித்தாள். பல மைல்களுக் கப்பாலுள்ள தனது சுற்றத்தார்வீட்டில் அடைக்கலம் புகுந்தனர். அவர்களும் மனமுவந்து அவர்களைவரவேற்று வேண்டிய பணஉதவிபுரிந்தனர். மேரியோ தேவஅன்னையை வேண்டுவதில் தவறியதில்லை. வீட்டைவிட்டுப் புறப்பட்ட பத்தாம்நாள் இரண்டாவது மகளுக்கு அரசினர்பாடசாலையில் ஆசிரியத்தொழில் கிடைத்தது. படிப்பைமுடியாத மூத்தமகள் மெக்ரல்டாவுக்கு வரன் தேடும்முயற்சி ஆரம்பமாகிறது. ஆனால், ஒன்றும் கைகூடவில்லை.

[வளரும்]

—(⌣)—

# இஸ்பிரீத்துசாந்து திருநாள் சுவிசேஷம்

"ஒருவன் என்னைச் சிநேகித்தால் என் வாக்கியத்தையனுசரிப்பான்"

(அரு. 14 : 23 — 31)

இஸ்பிரீத்துசாந்துவானவர் அப்போஸ்தலர்மேல் இறங்கினமேரையையும், அவர்களை நிரப்பிய தேவ வரப்பிரசாதத்தின் மகிமையையும் நாம் நன்கு உணரவேண்டுமாயின் நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய யேசுவை நாம் நேசிக்கவேண்டும். அவரை நேசித்தால் அவருடைய போதனையின்படி நடப்போம். பிதாவும் நம்மை நேசிப்பார். இதனால் இவர்கள் இருவரிலுமிருந்து புறப்படும் இஸ்பிரீத்துசாந்துவை நாம் பூரணமாகப் பெற்றுக்கொள்வோம்.

இந்த இஸ்பிரீத்துசாந்துவை நாம் முதன்முதலாக ஞானஸ்நானம் என்னும் தேவதிரவிய அனுமானத்தினால் பெற்றுக்கொண்டோம். இன்னும் உறுதிப்பூசுதல் என்னும் தேவதிரவிய அனுமானத்தினால் நாம் இவரைப் பூரணமாகப் பெற்றுக்கொண்டோம். இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருக்கும் சகல ஆத்துமங்களிலும் அவர் வாசம்பண்ணுகிறார்.

இவரே எம்மைப் பரிசுத்தப்படுத்துகிறவர், எம்மைத் தேற்றுகிறவர், எம்மைத் திடப்படுத்தி, உலகசீவியத்தின்போது எமக்குவரும் ஆத்துமசரீர கஷ்ட துன்பங்களை நன்மனசோடு சுமக்கப்பண்ணுகிறவர். இவரில் நாம் வைக்கவேண்டிய பத்திநேசம் மிகப்பெரிதாயிருக்கவேண்டும்.

—(⌣)—

# தற்காலச் சினிமாவைப்பற்றிச் சொல்லப்போனால்...

செல்வி மேரிரோசலீன் சூசைப்பிள்ளை

கலைக்கூடங்கள் எனஅறியப்பட்டு அருமையாகப் பேணிவந்த சினிமாக் கூடங்கள் இன்று இருக்கும்நிலை? கலையைவளர்க்கும் மனிதப்பண்பையும், பழக்கவழக்கங்களையும் மக்களுக்குத் தெளிவிக்கும் சாதனமாகத் திகழ்ந்த சினிமாக்கலையில் இன்று ஏற்பட்டிருக்கும் திருப்பம்என்ன?

'சமூகநாவல்' எனஅறியப்படும் சிலகதைகளைத் திரையில்தோன்றப் பண்ணி, அது அடக்கியுள்ள— மக்களின் அறியாமை அந்தகாரத்தை நீக்கி, வாழ்வின் அன்றாடசூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கேற்ற நிகழ்ச்சிகள்அடங்கிய வீரதியாகச் செயல்களைக் கொண்டகாட்சிகளை வாயுவேகத்தில் திருப்பிவிட்டு, மக்களின்மனதில் ஆபாசஎண்ணங்களை எழுப்பிக் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டவல்ல காதல்பித்தலாட்டக் காட்சிகளையும், இவைபோன்ற பிறகாட்சிகளையும் ஆமைவேகத்தில் நகர்த்திக்கொண்டிருப்பதுதான சினிமாஉலகு மக்களுக்கு ஆற்றிவரும்தொண்டு.

தற்காலச்சினிமா பொதுவில்மாணவர்களையும், சிறப்பாக இளைஞர்களையும்கடமைப்பற்றற்றவர்களாய், சுயநலப்பிரியர்களாய், இடாம்பீகவாழ்வில் மோகங்கொண்டவர்களாய், ஒழுக்கத்தை விலைகூறிவிற்பவர்களாய், மனிதப்பண்பும், இச்சையடக்கமுமற்றமனிதப்பதர்களாய், மாற்றவல்ல சக்தியுடையதாய்த் திகழ்கின்றது.

பொதுவில்மக்கள் சினிமாத் தியேட்டர்களை நாடக்காரணம் சினிமா சிறந்த பொழுதுபோக்கென அவர்கள் எண்ணுவதுதான். அப்படியானால் பொழுதுபோக்காக எதுவும்செய்யச் சக்தியற்ற பெரியோரும், முதியோரும் மற்றும் மனக்கவலையால் அல்லலுறுவோரும் சினிமாப்படங்களைப் பார்க்கலாம். அவர்களுக்கு அதனால் அதிககெடுதல் எதுவும் நேராது. ஆனால், இளைஞராகிய நம்மைப் பொறுத்தவரையில் தற்காலச் சினிமாத்திரைகளில் தோன்றும் சிலகாட்சிகளின் நிமித்தம் நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

இதையிட்டு நமக்குப் பொழுதுபோக்க வேறுசாதனங்கள் இல்லையெனச் சாற்றுவோமானால் மிகவும் வேடிக்கையாகும். ஏனெனில், இளைஞராகிய நம்மிடம் காலைதொடங்கிக் கண்ணுறங்கப் போகும்வரையும் கண்டிப்பாகச் செய்துமுடிக்கவேண்டிய சிலஅலுவல்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒப்பிக்கப்பட்டுள்ளன. இதோ நமக்குக்குறிக்கப்பட்ட அலுவல்கள் எல்லாம் செய்தாயிற்றென்றால், பொழுதுபோக்க— உடலை உரம்பெறச்செய்து உள்ளத்திற்குத் தென்பூட்டும் விளையாட்டுகளும், சங்கீதம்போன்ற பிறவுமுண்டு. இன்னும் அறிவைப் பெருக்கவும், நல்லொழுக்கத்தைப்பேணவும் நமக்குத் துணைச் செய்யவல்ல நூல்களை வாசித்துஇன்புறலாம். இத்துடன் இளைஞராகியநம்மை ஒழுக்கத்தில் இருந்து விலகி இதயசுத்தியை இழுக்கச்செய்யும் வகையில் அமைக்கப்படாத படங்களைப் பார்க்கலாம்.

இவ்வண்ணமின்றி நம்கடமைகளை மறந்து, பிறர்தூற்றும்வண்ணம் "காலை எழுந்தவுடன் காப்பி—பின்பு கனிவுகொடுக்கும் நல்லகாலைச் சினிமா" எனஆரம்பித்துப் பின்புசினிமாவே தஞ்சம் என்னும் அளவிற்குச் சினிமாவை ரசிக்கும்வண்ணம் முன்னேறிவிட்டோமானால், அதிலும் ஆபத்தானநிலை பிறிதொன்று இளைஞராகியநமக்கு ஏற்படப்போவதில்லை. சதா சினிமாவிற்குப் போகப்பழகினால் பின்னர் இதுநல்லபடமா? கெட்டபடமா? இதைப்பார்ப்பதினால் கெடுதல் எதுவும்நேருமா? எனச்சீர்துக்கிப்பார்க்கும்மனோநிலை அற்றுப்போய்விடும். "இது அவ்வளவு மோசமான படமல்ல; இதைப் பார்க்கலாம்" என நம்மைநாமே ஏமாற்றிக்கொண்டு போவதுடன் நின்றுவிடாது படத்திற்கண்டவற்றையும் பின்பற்ற முற்படுவோம். மிகவும் பெலவீனமுள்ளதும், இயல்பிலேயே தீமைக்குச் சார்புள்ளதுமான நம்மனப்போக்கு நாம்பார்த்தவற்றுள் நற்போதனை யளிப்பதாய் இருந்த இரண்டொருகாட்சிகளையும் நம்மனதிலிருந்து தீவிரமாக அகற்றிவிட்டுக் கீழ்த்தரமான உணர்ச்சிகளையூட்டவல்ல ஆபாசக்காட்சிகளை மட்டும் சதா நினைவூட்டிக்கொண்டிருக்கும். இத்துடன் சூழ்நிலைகளும் சேர்ந்துகொண்டால் இலகுவாய்ப் பிசகிவிடுவோம்.

எனவே, சீவியகாலத்தின் எந்த நிலையும் அதற்குரிய ஆபத்தைக்

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

யேசுவே! மாதாவே! என்னும் நாமங்களை உச்சரிக்கும்போது பயபத்தியாய் உச்சரிக்கப் பழகுதல்வேண்டும். விளையாட்டாக ஒருபோதும் இந்த நாமங்களை வீணிலே உபயோகிக்கவேண்டாம். அது முதலாம் கற்பனையால் விலக்கப்பட்ட பாவம். 'ஆ! கடவுளே', 'அந்தோனியாரே', 'ஐயோ கடவுளே' என்று சில பெரியோர்களும் எடுத்தகாரியத்துக்கெல்லாம் சொல்லுவார்கள். அது தவறு. அர்ச்சியசிட்டர்களுடையவும், சருவேசுரனுடையவும் பரிசுத்தமான பெயர்களை விளையாட்டாக, வியர்த்தமாக உபயோகிப்பது கூடாது. பொய்ச்சத்தியம் செய்யாதிருக்கவும், பாவமான காரியங்களில் இப் பரிசுத்தமான பெயர்களைக் கூருது இருக்கவும் பழகவேண்டும்.

நமக்கு ஆபத்து வரும்போதும், பசாசின் சோதனையின்போதும் நாம் யேசுவுடையவும், மாதாவுடையவும் நாமங்களை உச்சரித்தால் கட்டாயம் உதவி கிடைக்கும். மற்றும்படி அவை பரிசுத்த நாமங்கள் என்று அவற்றிற்குச் சங்கையும், வணக்கமும் காட்டி, கண்டகண்டபடி உபயோகிப்பதை நிறுத்தி, அத்துர்ப்பழக்கம் தற்செயலாகத்தன்னும் வராதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

உங்கள் அன்புள்ள அண்ணு.

## உங்களுக்குத் தெரியுமா?

(1) திருச்சபையின் முதல் அறுபது பாப்புமார்களில் 57 பேரும் வேதசாட்சிகளும், அர்ச்சியசிட்டர்களும் ஆனுர்கள் என்பது......

(2) யூதர்களின் இஸ்ருயேல் நாட்டில் தற்போதுள்ள யூதர்களைக் காட்டிலும் அமெரிக்க நியூயோக் மாகாணத்திலே இருமடங்கு யூதர்கள் வசிக்கிருர்கள் என்பது......

(3) அர்ச். அன்னம்மாளின் சின்னம் கதவு என்பது......

(4) ருஷிய பிரதமரான நிகிதா குருஷெவ்வின் புதல்வியான றடாவும், அவள் கணவரும், மஸ்கோ நகரில் பிரசுரமாகும் "இஸ்வெஸ்ரியா" என்ற கம்யூனிஸ்த பத்திரிகையின் ஆசிரியருமான அலெக்ஸி அட்ஜூபெய் என்பவரும் சென்ற மார்கழியிலே பரீஸ்நகரில் தங்கியிருந்தபோது அங்குள்ள நோட்றேடாம் ஆசனக்கோவிலில் கிறிஸ்மஸ் நடுச்சாமப்பூசை கண்டார்கள்என்பது ...

(5) அருளப்பபாப்பரசரால் ஆக்கப்பெற்ற முதலாவதுகருதிஞல் தற்போது மிலான்நகர் அதிமேற்றிராணியாராக விளங்கும் கருதிஞல் ஜியோவான்னி மொந்தினி ஆண்டவரே என்பது......

(6) 1879-ம் ஆண்டு ஆவணி மாதம் 21-ந் திகதியன்று பரிசுத்த தேவதாயாரும், அர்ச். சூசையப்பரும், அர்ச். அருளப்பரும் அயர்லாந்திலே நொக் எனுமிடத்தில் ஒருகூட்டம் கிராமவாசிகளுக்குக் காட்சியளித்தார்கள். இன்று அங்குதான் அயர்லாந்தின் பிரபல திருசேத்திரம் இருந்துவருகிறது. அதன் பலிபீடத்திற்குமேலாக அவர்கள் காட்சியளித்த அதேமாதிரியில் மூவரின் சுரூபங்களும் காணப்படுகின்றன. அயர்லாந்தின் லூர்துபதியென இன்று அறியப்படுவது இந்த நொக் திருசேத்திரமே என்பது ......

## அளவில்லா அன்பின் உறைவிடம்

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்" என்பது பழமொழி. உலகிலே தாயன்புக்கு இணையானஅன்பு வேறில்லை என்றே கூறுவர். மிருகங்களும், பட்சிகளும் தம் குட்டிகளையும், குஞ்சுகளையும் எங்ஙனம் நேசிக்கின்றன என்பதை நாம் கண்கூடாகக் காணமுடிகிறது. ஓர் ஆப்தநண்பன் எவ்வாறு எம்மை நேசிப்பான் என்பதும் நாம் அறிவோம். அவன் சமயத்தில் உயிரையும்கொடுப்பான் அல்லவா? உலகவாசிகள் இவ்வாறு அன்புகாட்டிஞல் அளவில்லாத இரக்கம்நிறைந்த தேவன் எவ்வாறு எம்மை நேசிக்கிருர் என்பதை யார்தான் அளவிட முடியும்? பாவத்திஞலே கெட்டழிந்த நாம் பசாசின் அடிமைத்தனத்தில் நின்று மீட்கப்படும்பொருட்டு மனித அவதாரம் செய்த பரம தேவனின் அன்பை, மனுக்குலத்தை எப்படி நேசித்தார் என்பதை எங்ஙனம் எடுத்துரைக்கலாம்? வனாந்தரத்தில் வசிக்கும் பெலிக்கான் பட்சியைப்போல—அது தனது குஞ்சுகளுக்குத் தனதுஇரத்தத்தையே உணவாகக் கொடுப்பதுபோல் யேசுவின் அளவில்லாதஇரத்தத்தை எமக்காகச் சிந்தி—கடைசித்துளிமுதலாய்த் தனக்கென வையாது சிந்திய அவருடைய நேசத்துக்கு அளவுண்டோ! சிநேக அக்கினி சுவாலித்தெரியும் அவருடைய இருதயத்தைவிட வேறு எங்கே நித்திய அன்பு உண்டு? அன்பின் உறைவிடமான அந்த இருதயத்தை நாம் நேசிக்கவேண்டாமா?

தம்மையே எமக்கு உணவாகத் தந்து, தமது திரு இரத்தத்தைப் பானமாகத் தந்து என்றென்றும் எமது ஆத்துமபோசனமாயிருக்கும் அவருடைய இருதயஅன்பை நாம் மறக்கவும் முடியுமா? சகல புகழ்ச்சிக்கும் மிகப்பாத்திரமான இருதயத்தை இந்த ஆனிமாதத்தில், யேசுவின் திருஇருதயத்துக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட இந்தமாதத்தில் நாம் அதிகமதிகமாக நேசிக்கவேண்டும். சகல ஆறுதலின் ஊற்ருன அந்தஇருதயம், பாவிகளின்அடைக்கலமான அந்த இருதயம் பாவிகளை என்னண்டை வாருங்கள் என்று பரிந்து அழைக்கும் இருதயம். நாம் அதற்கு ஆறுதல் கொடுக்கவேண்டும். எமது சஞ்சலங்களைக் களைய, எமது பாவங்களைக் கழுவ அவ்விருதயத்தை அண்டிப்போவோம்.

உலக மக்களுடைய பாவ அக்கிரமங்களால், தேவ துரோகங்களால், நன்றிகெட்டதனங்களால் நிந்தைப்படுத்தப்பட்டு, நொந்து வருந்தும் அவ்விருதயத்துக்குச் சிறுவராகிய நாம் ஆறுதல் கொடுக்க ஓடிப்போவோம். அவர் துக்கம் துடைப்போம். வாருங்கள் எல்லோரும் யேசுவிடம்.

— எஸ். எம். ஜே.

தேவனில் உன்சிநேகிதர்களை நேசி; தேவனுக்காக உன்சத்துராதிகளைச் சிநேகி.

— அர்ச். எலிசியுஸ்.

## விடுகதைகள்

(எஸ். ஜெயநாயக முதலி)

உழவருக்கெல்லாம் உதவி செய்வேன், உலகில் அதிக பகுதியை அடக்கி உள்ளேன், மேகத்தைக்கூட மேவி உள்ளேன், தாகத்தைக்கூடத் தணிக்க வல்லேன் நான் யார்?

* * *

உலகத்தை ஆளுபவர், ஆனல் செங்கோல் ஏந்திய மன்னருமல்ல. மனித சுபாவத்திலே பிறந்து, மனித சுபாவத்திலே இறந்தவர், ஆனல் மனிதருமல்ல. இரட்சிப்பு என்ற கொள்கையை ஆயுதமாகக்கொண்டவர், ஆனல் மகானுமல்ல!

அவர் யார்?

* * *

குட்டிஈனும், மாடுமல்ல.
பால்கொடுக்கும் ஆடுமல்ல.
வாலால் அடிக்கும், கங்காருமல்ல.
நீரில் வாழும் முதலையுமல்ல.

அது என்ன?

* * *

ஊருராய்ப் பறக்கும், பறவையல்ல. நெருப்பிலிட்டால் எரியும், விறகுமல்ல. காலையில் உதிக்கும், சூரியனுமல்ல. அறிவையூட்டும் ஆசிரியனுமல்ல. செய்திகளை அறிவிக்கும் வானெலியுமல்ல.

அது என்ன?

சிறுவர், சிறுமியரிடமிருந்து சிறுகதைகள், கட்டுரைகள், அர்ச்சியசிஷ்டர்களின் சுருக்கமான வரலாறு, விடுகதைகள், காஷ்யமான சம்பாஷணைகளை அண்ணு எதிர்பார்க்கிருர்.

அண்ணுவின் முகவரி:

அண்ணு,
புனித அன்னுள் கோவில்,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

## வாழ்க மாமரி வானேர் ராஜேஸ்வரி

— W. L. J. பெர்னுண்டோ, நீர்கொழும்பு —

பல்லவி

வாழ்க மாமரி வாழ்க மாமரி வானேர் ராஜேஸ்வரி
வரப்பிரசாத சம்பூரணியான எம் தாயே நீ ஆதரி.

சரணம்

மாசணுகாத உற்பவ சுசிலியே மாண்பாரும் லீலியே
பாசமகற்றும் பரமமா மூலியே பாவி கைகோலியே
நேசமுடனும் பதமே சேர்ந்தோம் நிமல அன்னையே
ஆசையோ டுனதருளே தந்து ஆழ்வாய் என்னையே. (வாழ்க...)

தாவிது கோத்திரி தாசர்க் கருள்செய் தயைநிறை நேத்திரி
ஆவி தந்தெமை ரட்சைசெய் தேவசேயின் தாயாம் தயாபரி
பாவி எம்பாவ நோய்கள் தீரவேண்டும் கிர்பாகரி
பூவிலே சுகசீலராகச் செய்கரு ணுகரி. (வாழ்க...)

பஞ்ச தாகமிகுந் தோடிவந் தோர்க்கருள் பாலித்தாள் வாயம்மா
வஞ்சப்பேயின் மாயைகள் மிஞ்சிடும்வேளையுன் தஞ்சந்தந்தாளம்மா
பாரில் பிணிகள் பலுகிடாது பாதுகாத் தாளம்மா
நேரில்நினது பாதமேபோற்ற நின்னருள் தாஅம்மா. (வாழ்க...)


தண்டமிழ்த்தாயே எம்தாபரம்நீயேஎம் கண்ணீரைப் பாரம்மா
எண்ணில் இடர்வந்தபோதும் இவ்லங்காவில் எம்மைத் தற்காரம்மா
மண்ணவரை ரட்சைசெய் யேசுமறையைக் காரம்மா
விண்[illegible]ம்மா. (வாழ்க...)

உங்களுக்குத் தெரியுமா? By Scio



உலகில்எக்காலத்திலாவதுபிறந்து உயிர்வாழ்ந்த மகாப்பெரியகுழந்தையானது இன்றைய வைத்தியசரித்திரத்தில் கண்டறியப்பட்டுள்ளபடி, பிறந்தபோது $32\frac{3}{4}$ ருத்தல் நிறைகொண்டதாய் இருந்தது. அக் குழந்தையின் தாயான திருமதி அன்னு பேற்ஸ் 7 அடி $5\frac{1}{2}$ அங்குல உயரமுள்ளவள். இந்தக் குழந்தை 1879-ம் ஆண்டு நோவாஸ் கோஷியாவில் பிறக்கலாயிற்று.

உங்களுக்குத் தெரியுமா? By Scio



புசங்களும், கால்களுமில்லாத பொலிவியநாட்டுப் பையன் ஒருவன் வட—தென் அமெரிக்காவுக்கிடையே சமீபத்தில் சிநேகபான்மையை அபிவிருத்தி செய்துவிட்டிருக்கிருன். "உலகில் இதுவரை எக்காலத்திலாவது செய்யப்பட்ட மகா விலையேறப்பெற்றகால்களை" ஐக்கிய அமெரிக்கதேச டக்றர்மார் இந்தப் பையனுக்கு உபகரித்தார்கள். அவற்றைக்கொண்டு அவன் இப்போது நடந்து உலாவுகிருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தற்காலச் சினிமாவைப்பற்றி........

[ இளைஞர்பக்கத் தொடர்ச்சி ]

கொண்டுள்ளது. எனினும், வாலிப வயதுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப்பண்ணுவது என்பதை நினைவுகூர்ந்து இதயசுத்தியை இழந்துபோகாமல் இருக்கவிரும்பினுல் கெட்டபுத்தகம் பத்திரிகைகளை வாசியாது விலக்குவதுபோல், மனிதப்பண்பையும், ஒழுக்கத்தையும் பாதிக்கும்வண்ணம் அமைந்த சினிமாக் காட்சிகளையும் விலக்குதல் வேண்டும்.

மாசற்ற மனச்சாட்சியுள்ளோராய் இளமைப்பராயத்தை எட்டிப் பிடிக்கும் இளம்மக்களைத் தன்வலையிலகப்படுத்தி அன்னாரின் உள்ளங்களைக் கறைப்படுத்துவதற்குச் சாத்தான் ஏற்படுத்தியிருக்கும் சாதனமோ என வியக்கும்வகையில் அமைந்துள்ளது தற்காலச் சினிமாவின் போக்கு. எனவே, தற்காலச் சினிமாவின்மட்டில் தற்கால இளைஞராகிய நாம் மிகவும் சாக்கிரதையாக இருத்தல் அவசியமாகும்.



## இந்திய கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. சத. |
|---|---|
| புதுத்தியானங்கள் (அனுதின தியானக்குறிப்புகள்) | ...15-00 |
| சத்தியவேத சித்திரவிளக்கம் | ... 5-50 |
| புதியஏற்பாடு (பெரிது) | ... 8-50 |
| ,, (சிறிது) | ... 3-75 |
| ஞானோபதேசக் கோர்வை (மூன்று பாகங்களும்) | ... 9-75 |
| சத்திய வேதாகம சங்ஷேபம் பழையஏற்பாடு & புதியஏற்பாடு | 1-00 |
| திருப்பாடுகளின்மேல் தியானம் | ... 1-25 |
| கிறீஸ்துநாதர் அனுசாரம் | ... 3-25 |
| வாழ்க்கையில் வழிகாட்டி | ... 2-75 |
| கன்னியர் ஒழுக்கம் | ... 1-00 |
| தாவீது இராசாவின் 150 சங்கீதங்கள் | ... 2-60 |
| யேசுநாதர் | 2-75 / 3-90 |
| அன்பின் அழைப்பு | ... 2-75 |
| அன்பின் அனல் | ... 45 |
| அன்பின் அரசர் | ... 2-00 |
| கத்தோலிக்கு களஞ்சியம் | அச்சில் |
| மன்ரேசா | ... 3-00 |
| அர்ச்சியசிஷ்டவாரம் | ... 1-00 |
| ஞானசீவியம் | ... 3-00 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா | ... 1-00 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் | ... 2-25 |
| என்பலி (சங்கீதத்துடன்) | ... 1-25 |
| என்பலி (சங்கீதம் இல்லாமல்) | ... 40 |
| மரியாயின் மைந்தர் பொக்ஷம் | 2-50 / 2-00 / 1-50 |
| மரியாயின் வல்லபம் | ... 2-00 |
| கற்பு என் பொக்ஷம் | ... 05 |
| தேவமாதாவின் அமலோற்பவ மகிமை | ... 50 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன்? | ... 25 |
| புதுநன்மை பாடத்திட்டம் | ... 90 |
| திருக்குடும்ப பக்திமாலை | ... 3-00 |
| பத்தாம் பத்திநாதர் | ... 2-60 |
| திருஇருதய வணக்கமாதம் | ... 2-00 |
| சூசையப்பர் வணக்கமாதம் | ... 2-00 |
| திருஇருதய நவநாள் | ... 25 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி நவநாள் | ... 35 |
| உத்தரிக்கிற ஆத்துமாக்களின் வணக்கமாதம் | ... 1-65 |
| செந்துகில் (அர்ச். மரியகொறெற்றியின் வாழ்க்கைச்சித்திரம்) | ... 1-60 |
| சனிக்கிழமைப் புதுமை | ... 2-00 |
| ஞாயிற்றுக்கிழமைப் புதுமை | ... 1-30 |
| திங்கட்கிழமைப் புதுமை | ... 1-30 |
| தாழ்ச்சிக் கண்ணுடி | ... 50 |
| துறவற சல்லாபம் | ... 1-00 |

**கத்தோலிக்க சரிதைகளும், நாவல்களும்**

| | |
|---|---|
| வேதசாட்சி | ... 1-00 |
| பலித்த கனவு | ... 1-00 |
| தமிழ்த்தூது | ... 3-60 |
| அர்ச். சூசையப்பரின் மகத்துவம் | ... 1-30 |
| அர்ச். சவேரியார் | ... 1-00 |
| தேவப்பிரசைகள் திருச்சரிதை | ... 1-60 |
| அர்ச். சரித்திரம் 4 பாகமும் | ... 12-00 |
| யேசு திருச்சரிதை | ... 1-00 |
| யேசுவின்சிறிய புஷ்பம் | ... 1-10 |
| அர்ச். அந்தோனியார் சத்துரு சங்காரமாலை | ... 1-10 |
| அர்ச். சூசையப்பர் | ... 55 |
| அர்ச். அருளானந்தர் | ... 2-00 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் | ... 1-10 |
| அர்ச். வின்சென்ட் தெ பவுல் | ... 1-10 |
| பிரதாப முதலியார் சரித்திரம் | ... 3-90 |
| பிரதாப முதலியார் சரித்திரம் சிறுவர், பதிப்பு | ... 2-00 |
| அர்ச். சவேரியார் சரித்திரம் | ... 3-25 |
| பங்கிராஸ் | ... 3-50 |
| இரத்தம்வடிந்த லீலி | ... 75 |
| இன்பத்திலும் துன்பத்திலும் | ... 2-00 |
| திக்கற்ற தையல் | ... 2-00 |
| மலரோ மணமோ | .... 2-60 |
| லீலிமலர் (அல்லது)கற்பெனும் பரிசுத்த புண்ணியம் | ... 1-55 |
| வேதாகமசரித்திரம் பழைய வேதம் | 1-25 |
| வேதாகமசரித்திரம் புதிய வேதம் | 1-25 |
| திருச்சபைச் சரித்திரம் | ... 1-25 |
| வீரப்பெண்ணின் வீரப்புதல்வி | ... 1-00 |

● தபாற்செலவு பிரத்தியேகம்.

● புஸ்தகப் பெறுமதியின் அரைவாசிப்பணம் அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 10802**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

ஊர்காவற்றுறை, காரம்பன்
சுப்பையா கோபாலபிள்ளை
— வழக்காளி.

எதிராக

ஊர்காவற்றுறை, காரம்பன்
1. கணபதிப்பிள்ளை கந்தையா
2. ஷையூர் பெண் பூரணம்
காரம்பன், தற்பொழுது கொலனுவ என்னுமிடத்தில் வசிக்கும்
3. J. எட்வேட் வீரசிங்கம்
4. ஷையூர் பெண் கிறேஸ் எட்வேட்.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 10802-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1960-ம்ஞ ஆனிமீ 29-ம்உ புதன் கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 1000மும், ரூபா 500-க்கு 11-2-54 தொடக்கம் 13-7-54வரை 12 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமானவட்டியும், கோட்டுச்செலவு ரூபா 211-00.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக்தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக்கோவிற்பற்று, காரம்பனிறை "பிடாரிக் குளம்" பர. நெ. இல.8 குளி$3\frac{1}{8}$ (பர. நெ. இல. எட்டுகுளி மூன்றுடன் எட்டிலொன்று) கல்வீடும், தலைவாசலும், கிணறும், வேம்பும், மாமரமும், தென்னைகளும். எல்லை: கிழக்கும், தெற்கும்—ஒழுங்கை. வடக்கு — அந்தோனிப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளைக்குரியவாதனம். மேற்கு—ஆசீர்வாதம் பெண் மேரிமார்கறட்டிற்குரியவாதனம் இதடங்கலும். இதன் பதிவு C. 211/29

வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனர்.

காரைநகர்,
1960-ம் ஞ வைகாசி மீ 25-ந் திகதி.

### நன்றித் துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரி. சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலாகிய அர்ச். யூதாததேயு, அர்ச். அந்தோனியார், சங். அல்போன்சா கன்னியாஸ்திரி, அர்ச். சவேரியார் இவர்களின் மன்றாட்டினுல் எனக்குவந்த ஆபத்தான நோய் நீங்கியது. இன்னும் பூரண சுகங் கிடைக்கும்படி மன்றாடுகிறேன்.

கொழும்பு 13, லூர்த்துமேரி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3018**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

சரவணை
1. இராமலிங்கம் சங்கரப்பிள்ளை
2. ஷையூர் பெண் நாகம்மா
— வழக்காளிகள்.

எதிராக
சரவணை
1. முருகேசர் கணபதிப்பிள்ளை
2. ஷையூர் பெண் நாகம்மா
3. ஷையூர் சின்னத்தம்பி கயிலாசபிள்ளை
4. ஷையூர் பெண் பரமேஸ்வரி
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3018-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1960-ம்ஞ ஆடிமீ 2-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 907-67 சதமும், ரூபா 500-க்கு 3-9-1959 தொடக்கம் 24-12-59 வரை 12 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமானவட்டியும், கோட்டுச் செலவு ரூபா 198-80 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, ஊர்காவற்றுறைக்கோவிற்பற்று, சரவணையிறை "அளுகன்பிட்டி" பர. நெ. இல. 7 குளி 7. (பர. நெ. இல. ஏழு குளிஏழு) பனைகள் வடலிகள், தென்னைகள், வேம்புகளும். எல்லை: கிழக்கு—மூத்ததம்பி தம்பையாவிற்கும், பெண் திருமேனிப்பிள்ளைக்குமுரிய வாதனங்கள். வடக்கும், மேற்கும்—ஒழுங்கை. தெற்கு — இராமநாதர் சீனிவாசகத்திற்கும், பெண் செல்லம்மாவிற்குமுரிய வாதனங்கள். இதடங்கலும். கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பாகமும், வழிவாய்க்காலுரித்தும். அக்காணியின் வடக்கெல்லையருகால் குறித்த கிணற்றிற்கு இக்காணியிலிருந்து போக்குவரவுசெய்யும் பாதையுரித்தும். இதன் பதிவு C. 273/145.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

காரைநகர்,
1960-ம் ஞ வைகாசிமீ 26-ம் திகதி.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினுலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச்சியசிஷ்டர்களான சூசையப்பர், பிலிப்புநேரியார், சவேரியார், அந்தோனியார், சிறியபுஷ்பம் இவர்களின் மன்றாட்டினுலும் மகனுக்கு உண்டான வியாதி சுகமானது. இன்னும் அவருக்குப்பூரண சுகம் கிடைக்கவேண்டுமென்று அவர்களை இரந்து மன்றாடி, நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கத் தாமதித்தமைக்கு மன்னிப்புக் கோருகிறேன்.

சில்லாலை கிழக்கு, அ. சி.

"சந்ததிவிருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக்கொள்ளச் சுயகட்டுப்பாடுஒன்றுதான் நிச்சயமானமார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினுல் அது மனித குணத்தின் தற்கொலையாகும்."

— காந்தியடிகள்.

* * *

சீவியத்தின் எந்நிலையும் அததற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப் பண்ணுவது. நற்குணங்களை மனதிற் பதிக்கும் வசந்தகாலம் இதுவே.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1981**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

ஊர்காவற்றுறை, காரம்பன்
B. A. இராசையாபிள்ளை
கைம்பெண் எலிசபெத் முத்தம்மா
— வழக்காளி.

எதிராக
நாரந்தனை
பிரகாசம் லியோன்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 1981-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1960-ம்ஞ ஆடிமீ 9-ம்உ சனிக்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 818-10 சதமும், ரூபா 600-க்கு 19-12-57 தொடக்கம், 4-3-58வரை 18 வீதமானவட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 175 47 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று, நாரந்தனையிறை "பெரியபிராண சீமாவும் கொத்தன் குடியிருப்பும் பிராண சீமாவும்" பர. நெ. இல. பத்து (பர. நெ. இல. 10). பனைகள், வடலிகளும். எல்லை: கிழக்கு—அந்தோ மரிசிலுக்குரியவாதனம். வடக்கு—மனவல்யோசைக்குரியவாதனம். மேற்கு—பர்னாந்து வலத்திக்குரியவாதனம். தெற்கு—முருகர் கந்தையாவிற்குரியவாதனம், இதடங்கலும். மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப்பாகமும் வழிவாய்க்காலுரித்தும்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொமிஷனர்.

காரைநகர்,
1960-ம் ஞ வைகாசிமீ 26-ந் திகதி.

## மரியாயின்சேனை உற்சவம்

கொழும்பு, கொட்டாஞ்சேனை சந்த லூசியா அதிமேற்றிராசனக்கோவிலில் பரிகாரமாதா(தமிழ்)கியூறியாவின் மரியாயின்சேனை "ஆச்சேஸ்" உற்சவம் 22-5-60 வெள்ளிக்கிழமை பக்திசிறப்பாயும், அமைதியாயும் நடைபெற்றது. இதில் 17பிறெஸீடியங்களின் ஊழியஅங்கத்தினரும், உதவிஅங்கத்தினருமாக 550பேர் கலந்துகொண்டனர். ஆத்துமகுருமார் தனித்தனியாகவும், ஊழியஅங்கத்தினர் இருவர்இருவராகவும், உதவிஅங்கத்தினர் மூவர்மூவராகவும் வெக்ஸிலத்தின்மேல் கைவைத்து "என்இராக்கினியே; என் தாயே! நான்முழுவதும் உமக்குச்சொந்தம்; என்னிடமுள்ளது சகலமும் உமக்கேசொந்தம்என்று தங்களை மாசில்லாத மாதாவான பரலோக,பூலோக இராணிக்குத்தனித்தனியாய் ஒப்புக்கொடுத்தனர். வண. எட்வின் பெர்னாந்துசுவாமிகள் ஆச்சேஸ்உற்சவம் எத்தன்மையது என்பதை விபரித்து ஓர்அழகான பிரசங்கம் செய்தார். தேவதாய்க்கு ஒப்புக்கொடுக்கும் செபத்தைபடிக்கச் சேனையாளர் எல்லோரும் தொடர்ந்துபடித்து முடித்தனர். வண. றைமன் பீரீஸ்சுவாமிகள் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளிச்சேனையின் கடைசிச்செபங்களைச் சொல்லித் தேனினும்இனிய கீதங்களைப் பாடிமுடித்தார்கள். ஒவ்வொருபிறெஸீடிய உத்தியோகஸ்தரும் தத்தம்பிறெஸீடியத்தைச்சேர்ந்த ஊழியஅங்கத்தினரையும், உதவிஅங்கத்தினரையும் தவருது அழைத்துவந்தனர். சிரமத்தைப்பாராமல் சேவையே தமக்குத் தேவையென்று சேவைசெய்யும் கியூறியாத்தலைவர் திரு. பீலிக்ஸ் பெர்னாந்துஅவர்களையும், மற்றும்கியூறியா உத்தியோகஸ்தர்களையும், என்றும் மறக்கவியலாது.

ஏ. சி. சில்வெய்ரு
மரியாயின்சேனை பொருளாளர்
கொழும்பு, 11.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 2-1960.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org